முரசொலி

வார இதழ்

ஆசிரியர்: மு. கருணாநிதி

முரசு 4 | 26—7—57 | வெள்ளி | ஒலி 14

சாதனையாம், சாதனை!

[illegible]மை டெல்லியில் நடைபெற்ற இந்தியத் [illegible]ளர் மாநாட்டின் சாதனைகள் திருப்திகரமாய் இருக்கின்றன

★ பதுங்குகிறது, வரிப் பணம்; ★
★ பல்லிளிக்கிறது, சட்டம்! ★

உருவமற்றவன் என்று சொல்லப்படும் ஆண்டவனின் கல் உருவத்திற்காக குடம் குடமாகப் பால் வீணாக்கப்படுகிறது!

உயிர்களிடத்தில் அன்பைத் தவிர வேறெதையும் எதிர்பார்க்காதவன் என்று கருதப்படும் கடவுளுக்காக ஆயிரக் கணக்கான உயிர்கள் பலியிடப்படுகின்றன!.

—இவை மூடநம்பிக்கையால் விளைந்த முட்டாள்தனமான செயல்கள் மட்டுமல்ல: வாழ்க்கைக்குத் தேவையான பொருள்களை விரயமாக்கும் வீணான செயல்களுமாகும்!

—இவை போன்றுதான் இன்றைய ஆட்சி இயலிலும் பல சம்பவங்கள் காணக் கிடைக்கின்றன!

சில கொள்கைகளைத் தங்களுக்குத் தாங்களே உன்னதமானதென்று நினைத்துக் கொண்டு; பொது மக்களுக்கு எள்ளளவும் பயன் தராத அவைகளுக்காக பொது மக்கள் தரும் வரிப்பணத்தை வீணடிக்கிறார்கள்—லட்சம் லட்சமாக; கோடி கோடியாக!

மூட நம்பிக்கை கல்லுக்கு பாலாபிஷேகம் செய்யத் தூண்டுகிறது!.

ஆட்சி இயலிலே காணப்படும் மூட நம்பிக்கையும் அப்படித்தான்; தேவையில்லாத காரியங்கள் சில வெள்ளிப் பணத்தை வாயில் போட்டுக் கொண்டு ஏப்பமிட்டு விடுகின்றன!

பண்டிதரின் வெளி நாட்டுக் கொள்கையால் விளைந்த வீண் ஆடம்பரச் செலவினங்களை மட்டும் குறிப்பிடவில்லை.

உள்நாட்டிலும் அதே நிலைமைதான் நீடித்திருக்கிறது.

பக்தன் மாகாளியம்மைக்கு ஆடு வெட்டுகிறான். ஏன்? அவ்விதம் பலி கொடுக்கா விட்டால் பராசக்தி கோபாவேசம் கொள்வாள்; காலரா. அம்மை போன்ற கொடும் நோய்களை ஏவுவாள்; குடும்பம் குடும்பமாக வாயில் போட்டுக்கொள்வாள்—என்று அஞ்சுகிறான் பக்தன்!

இன்றைய ஆட்சி இயலிலும் அப்படித்தான்!

பெருந்தனக்காரர்கள்; கோடீஸ்வரர்கள்— இவர்கள் தரவேண்டிய வரிப் பணத்தை காசா சுத்தமாக அவர்களிடமிருந்து வாங்கிக்கொண்டால்—சட்டமென்னும் ஆயுதத்தை நீட்டி வரிப் பணத்தை வசூலித்துக்கொண்டால்—பணமூட்டை என்னும் தேவதை கோபாவேசப்படும்; தேர்தல் காலத்தில் தங்களைக் கைவிட்டு விடும்; பஸ்பமாக்கிவிடும்— என்று அஞ்சி நடுங்குகிறார்கள், ஆட்சி பீடத்திலிருப்பவர்கள்!

அந்த நடுக்கத்தின் பலனாக அந்தப் பண மூட்டைத் தேவதைக்கு வரிச் சலுகை என்னும் மாபெரும் பலியையும் தந்து; பெருந்தனக்காரர்களின் புன்சிரிப்பையும் பரிசாகப் பெற்றுக் கொள்கிறார்கள்!

—இந்த செய்கைகள்தான் இப்போது மிகவும் அவலமானதொரு நிலைமையை அடைந்திருக்கிறது!

ஆமாம்; அரசாங்கத்திற்கு உரிய வரியைத் தராமல் ஏமாற்றி வாழ்பவர்கள் பெருகிவிட்டார்கள்; நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகப் பெருகிக்கொண்டே வருகிறார்கள்!

இப்படி அரசாங்கத்தின் கஜானாவிற்குள் போய்ச் சேராமல் பண மூட்டைகளின் இரும்புப் பெட்டிகளுக்குள்ளாகவே பதுங்கிக் கொள்ளும் தொகை ஒரு கோடியோ அல்லது இரண்டு கோடியோ அல்ல.

பொருளாதார விற்பன்னர் கால்டர் மிகவும் தெளிவாகக் கூறியிருக்கிறார்—இந்திய உப கண்டத்தில் வரியாகக் கொடுக்கப்படாமல் ஏமாற்றப்படும் தொகை மட்டும் ஆண்டுதோறும் 200 கோடி ரூபாய் முதல் 300 கோடி ரூபாய்வரை இருக்கும் என்று திட்டவட்டமாகக் குறித்துள்ளார்!

—இது அயல் நாட்டிலிருந்து இங்கு வந்திருந்த பொருளாதார நிபுணர் தருகின்ற கணக்கு!

ஆனால் அரசாங்கக் கணக்கோ சென்ற ஆண்டில் வரியாக வசூலிக்கப்படாமல் ஏமாற்றப்பட்ட பணம் 186 கோடி ரூபாய் என்று கூறுகிறது!

186 கோடி ரூபாய் வரவேண்டிய வருமானம் அரசாங்கத்திற்கு வந்து சேரவில்லை!

அந்தப் பணம் தரவேண்டியவர்கள் யார்? ஒன்றும் இல்லாதவர்களா? ஓட்டாண்டிகளா? வீட்டின் அடுப்பை பூனை தூங்கும் படுக்கையறையாகப் பெற்றவர்களா?

இல்லை! இல்லை!

வசதியுள்ளவர்கள்; கோடியாகப் பொருளைக் குவித்து வைத்திருப்பவர்கள்; ஏழைகளின் குரல்வளையை நெறித்து ஏற்றம் பெற்று வாழ்பவர்கள்—அவர்கள்தான் இப்படி வரி கொடுக்காமல் ஏமாற்றியிருக்கிறார்கள்!

ஏன் அவர்கள் அப்படிச் செய்தார்கள்; செய்கிறார்கள்? அவர்களிடமிருந்து உரிய பணத்தைப் பிடுங்கிச் சேர்க்க வேண்டிய சட்டம் என்ன செய்கிறது?—இந்தக் கேள்விகள் வெடித்துக் கிளம்பலாம்!

அதற்கு நிதியமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் என்ன பதில் கூறுகிறார், பாருங்கள்!

"இப்போதிருக்கிற சட்டம், சட்டத்திற்கு மதிப்புக் கொடுக்காதவர்கள் வரி கொடுக்காமல் ஏமாற்றுவதற்கு மிக மிக உதவி செய்வதாய் இருக்கிறது எனவே இவ்வித சட்டங்களைத் திருத்தி சட்டம் செய்ய வேண்டும்!"

சட்டத்திலே ஓட்டைகள் பல இருக்கின்றனவாம்! அந்த ஓட்டைகளின் வழியாகப் பண மூட்டைகள் தப்பித்துக்கொள்கின்றனவாம்! நிதியமைச்சர் வெட்கமில்லாமல் ஒப்புக்கொள்கிறார், இந்த அவக்கேடான நிலைமையை!

நாட்டிலே உற்பத்தித் திட்டங்களைப் பெருக்குவதற்காக கண்ணைமூடிக்கொண்டு வரிக்கு மேல் வரியாகப் போட்டுத் தள்ளுகிறார்கள்!

ஏழை மக்களின் அன்றாடத் தேவைப் பொருள்களும்கூட இந்த வரிகளிலிருந்து தப்ப முடியவில்லை!

ஏழை நடுத்தர வர்க்கத்தவரிடமிருந்து அவர்கள் இரத்த வியர்வையையும் எடுத்துக் கொள்கிறார்கள்!

ஆனால் அதே நேரம் உயர் வகுப்பார்-பணமிருக்கிற ஒரே காரணத்தால் அரசாங்கத்தை ஆட்டிப் படைப்போர் இவர்களோ கொடுக்கவேண்டிய வரியைக்கூட கொடுக்காமல் தப்பி வாழ்கிறார்கள்!

அதுமட்டுமல்ல; மத்திய அரசாங்க ஊழியர்கள் உயர் ஊதியம் கோரி வேலை நிறுத்தம் செய்யப்போவதாகப் போராடுகிறார்கள் அல்லவா?

அவர்களுக்கு என்ன பதில் சொல்லுகிறார்கள் ஆட்சி பீடத்திலிருப்பவர்கள்?

அரசாங்கத்திடம் பணமில்லை!

தபால் தந்தி ஊழியர்களுக்கு என்ன பதில் கிடைக்கிறது?'

அரசாங்கத்திடம் பணமில்லை!

ஒரே பதில்தான்; எல்லோருக்கும்; எப்போதும்!

எப்படி அரசாங்கத்திற்குப் பணம் கிடைக்கும்? டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் சொல்லுகிறபடி வரி கொடுக்காமல் தப்பிவிடுகிற அளவுக்கு சட்டத்திலே ஓட்டைகள் இருக்கின்றனவே!

பொருளாதார விற்பன்னர் கால்டர் குறிப்பிடுகிறபடி ஆண்டொன்றுக்கு ரூபாய் 200 கோடி முதல் 300 கோடிவரை வரி கொடுக்காமல் ஏமாற்றப்படுகிறதே!

மிகவும் வேடிக்கையாகத்தான் இருக்கிறது!

சோஷலிச சமுதாயத்தை நோக்கி நாடு முன்னேறுகிறதாம்!

ஆனால் வரி கொடுக்காமல் வாழும் பண மூட்டைகள் இங்குதான் அதிகம் இருக்கிறார்களாம்!

அதை அனுமதிக்கும் வகையில் சட்டத்தில் சல்லடைக் கண்கள்போல் ஓட்டைகள் பலவும் இருக்கின்றனவாம்!

அந்தோ, பரிதாபம்! இந்த சோஷலிச வீரர்கள் இந்த ஓட்டைகளை எப்போதுதான் அடைக்கப் போகிறார்களோ? ஏழை எளியோர்கள் எப்போதுதான் வரிப்பளு நீங்கப் பெற்று சுகம் பெறப் போகிறார்களோ?

"முத்தாரம்"

★

இரண்டாவது ஆண்டு

துவக்க இதழ்

தயாராகிறது!

ஆகஸ்ட் முதல் வாரமே

விற்பனைக்குக் கிடைக்கும்!



வெள்ளி 26—7—57 சென்னை

மாணவர்களும், அரசியலும்!

"மாணவர்களை அரசியலுக்கு இழுக்காதீர்கள் !"

—இப்படி ஒரு வேண்டுகோள் விடுத்திருக்கிறார், கல்வி அமைச்சர் சுப்ரமணியனார்! அதையும் குறிப்பாக எதிர்க் கட்சியினரை நோக்கி அவர் பேசியிருக்கிறார் !

—இந்த வேண்டுகோளைச் சற்று ஆராய்ந்து பார்த்தோமானால் இதில் ஒரு ஆழ்ந்த கருத்து பின்னிக் கிடப்பதை நாம் காணலாம் !

வழுக்கி விழுந்த ஒருத்தி கன்னிப் பெண்களைப் பார்த்து, "நீங்களாவது ஒருத்தனுடன் கூடி வாழுங்கள்" என்று உபதேசித்தால் அதற்கு என்ன பொருள்?

"நான் ஒருவனுடன் கூடிவாழும் குடும்ப சுகத்தை அனுபவிக்க முடியாதவள். எனவே நீங்களாவது சுகமாக இருங்கள்"—என்னும் அனுபவப் பூர்வமான சித்தாந்தம் தோக்கி நிற்பதாகத்தான் பொருள் கொள்ள முடியும்!

அமைச்சர் சுப்ரமணியனார் காங்கிரஸ் கட்சியின் பிரதிநிதியாக அன்று பேசியிருப்பதால் அதை வழுக்கி விழுந்த சகோதரி ஒருத்தியின் அனுபவம் கலந்த அறிவுரையாகத்தான் ஏற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது.

ஏனெனில் காங்கிரஸ் கட்சி முன்னமேயே அரசியலுக்கு மாணவர்களை வலுக்கட்டாயமாக இழுத்துவந்து; அதனால் வழுக்கிவிழுந்த கட்சி என்று பெயரெடுத்த இபக்கமாகும்!

முன்னம் ஒத்துழையாமை இயக்கம் நடைபெற்ற காலத்தில் காந்தியார்முதல் சாதாரண 'கதர்க் குல்லாய்'வரை எல்லோரும் போட்டி போட்டுக்கொண்டு கல்வி நிலையங்களிலே புகுந்து; அறிவுரை தரும் புத்தகங்களை மூடிவைத்துவிட்டு மாணவர்களைக் கையைப் பிடித்து இழுத்து வந்தார்கள் !

அப்போதே ரவீந்திரநாத் தாகூர் காங்கிரசின் இந்தப் போக்கினை—மாணவர் வாழ்க்கையில் மாசு தூவும் இந்தக் கொடுமையை—வன்மையாகக் கண்டித்திருக்கிறார் !

தாகூரின் பொன்மொழி அன்று மதிப்பளிக்கப்படாவிட்டாலும், பின்னால் அகில இந்திய தேசியவாதிகள் அனைவரும் அதன் அருமையை உணர்ந்துகொண்டார்கள்.

அறிவு தேடும் பிராயத்தில் காங்கிரஸ் சார்புடைய மாணவத் தோழர்களின் வாழ்க்கையை—அறிவுத் தாகத்தைக் கெடுத்தார்கள்.

அதனால்தான் பதவிக்கு வந்த பிறகு அவர்களுக்கு இன்னும் காங்கிரஸ் கொள்கைகளில் ஊறித் திளைத்த ஒரு பொருளாதார நிபுணரோ, நிதி அமைச்சரோ கிடைக்கவில்லை !

அதனால்தான் காங்கிரசைக் குழி தோண்டிப் புதைக்கும் வேலையில் ஈடுபட்டிருந்த ஜஸ்டிஸ் கட்சியைச் சேர்ந்த ஆர். கே. சண்முகம் அவர்களையும் ; காங்கிரஸ் அல்லாத ஜான் மத்தாய் அவர்களையும் ; வெள்ளைக்காரனுக்கு நல்ல பிள்ளையாய் நடந்து வந்த தேஷ்முக்கையும் ; ஏகாதிபத்திய ஏஜண்டாய் விளங்கிய டி. டி. கிருஷ்ணமாச்சாரியையும் அவர்கள் வெட்கமில்லாமல் நிதி மந்திரிப் பதவிக்குப் பாக்குவைத்து அழைக்க வேண்டிய பரிதாபமான நிலைமை உருவாயிற்று !

என் ?

காங்கிரஸ் கட்சியிலே அந்த பொறுப்பான பதவியை வகிப்பதற்கு ஆள் இல்லை.

அப்படிப் பொறுப்புள்ள பதவியை; பேரறிவு இருக்க வேண்டிய அந்தப் பதவியை அடைவதற்காகத் தயாராகிக் கொண்டிருந்த ஆயிரமாயிரம் வாலிபர்களை அவர்களது மாணவப் பருவத்திலேயே காங்கிரஸ் அரசியலுக்கு இழுத்து ; அவர்களது சுவையான எதிர் காலத்தைப் பாழாக்கிவிட்டது !

—இதைத் திராவிட முன்னேற்றக் கழகம் நன்கு உணர்ந்திருக்கிறது. இருந்தாலும் விடுதலைக் கிளர்ச்சிக்கு மாணவர்களின் பங்கு என்ன என்பதையும் ; சீனு போன்ற நாடுகளில் மாணவர்களாலேயே விடுதலைக் கிளர்ச்சிக்கு வித்தூன்றப்பட்டது என்பதையும் அது மறந்து விடவில்லை.

அதனால் அது ; "மாணவர்களே! நீங்கள் அரசியல் போக்கைத் தெரிந்துவைத்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு உண்டான கருத்து எது என்பதிலே தெளிவு பெற்றிருங்கள். ஆனால் கண்ணை மூடிக் கொண்டு அரசியலில் குதித்து விடாதீர்கள்!"—என்கிற வகையிலே அது தனது கொள்கையை வகுத்துக்கொண்டிருக்கிறது!

திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு பொறுப்புள்ள எதிர்க் கட்சி அது, இன்றில்லாவிட்டால் நாளை— நாளையில்லையேல் நாளை மறுநாள் நாட்டு மக்கள் தன்னிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைக்கப் போகிறார்கள் என்பதிலே பெரு நம்பிக்கை வைத்திருக்கிறது! அதனால்தான் அது தனது வருங்கால பொருளாதார நிபுணர்களை; அரசியல் விற்பன்னர்களை; நிதி அமைச்சர்களைக் கெடுத்துக்கொள்ள விரும்பவில்லை!

தி. மு. க. வின் கொள்கை இவ்விதம் இருந்தாலுங்கூட நிதியமைச்சர் எதிர்க்கட்சியினரை நோக்கி இவ்வாறு வேண்டுகோள் விடுக்கத் தகுதியுள்ளவர்தானு—என்பதையும் இங்கு நோக்க வேண்டும்.

மாணவர்களை அரசியலுக்கு இழுக்கக்கூடாது என்பதை அனுபவப் பூர்வமாக உணர்ந்திருக்கும் கட்சியைச் சேர்ந்தவர் அவர்!

—இருந்தாலும் எதிர்க் கட்சிகளை நோக்கி வேண்டுகோள் விடுப்பவர் தனது சொந்தக் கட்சியைச் சற்றேனும் திரும்பிப் பார்த்தாரா? தனது கட்சி பழைய அனுபவத்திலிருந்து ஏதேனும் பாடம் கற்றுக் கொண்டதா—என்பதையாவது தெரிந்துகொண்டாரா?

—இரண்டுமில்லை! எதிர்க் கட்சிகள் மாணவர்களை அரசியலுக்கு இழுக்கக்கூடாது—என்று அன்பழைப்பு விடுகிற இந்த நேரத்துக்குச் சில திங்கள் முன்னதாகத்தான் காங்கிரஸ் காரியக் கமிட்டியிலே எதிர் காலத்தில் காங்கிரஸ் மாணவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொள்ள வேண்டும் என்று பேசியிருக்கிறார்.

மாணவர்கள் மட்டுமல்ல; ஆசிரியர்களையும்கூட காங்கிரஸ் கட்சிக்கு இழுத்துவரவேண்டும் என்றுகூட அப்போது யோசனை கூறப்பட்டிருக்கிறது!

"மாணவர்களை (காங்கிரஸ் கட்சி) அரசியலுக்கு இழுத்து வாருங்கள்!"

—இது காங்கிரஸ் தலைமைப் பீடத்தின் கோரிக்கை!

"மாணவர்களை (எதிர்க் கட்சி) அரசியலுக்கு இழுத்துவராதீர்கள்!"

—இது தமிழகத்தின் நிதியமைச்சரது கோரிக்கை!

இதை வைத்து டெல்லிக்கும் சென்னைக்கும் கொள்கையளவில் பேதமிருக்கிறது என்று யூகிப்பதைவிட, சுப்ரமணியனார் மாணவர்கள் காங்கிரஸ் அரசியலுக்கு வருவதிலே தவறில்லை; ஆனால் அவர்கள் எதிர்க்கட்சி அரசியலுக்கு நுழைவதுதான் தவறு—என்று குறிப்பிட விரும்புகிறாரா என்றும் சந்தேகிக்க வேண்டியிருக்கிறது!

ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம்! மாணவர்கள் தங்களது கல்விப் பருவத்திலேயே அரசியலில் ஈடுபடுவதும்; ஈடுபடாததும் ஆட்சிபீடத்திலிருப்பவர்களைப் பொறுத்துத்தான் இருக்கிறது!

அரசியல் என்பது நிகழ் காலத்தை மட்டுமல்ல; வருங் காலத்தையும் உள்ளடக்கிய ஒன்றாகும் !

எனவே வருங் ... பிரஜைகளாயிருக்கும் மாணவர்கள் வருங் காலத்தைப் ... சம்பவங்களை எப்படித்தான் பொறுத்துக் கொண்டி...

எனவே ... ஆளும் கட் ... மாணவர்க... யினர் ஆளு... தான் அர் ... விரும்புகி... ...காதீர்கள்

★ ★ கற்பனை உரையாடல் ★ ★

நினைவாகுமா?

[அன்றைய நாளிதழைப் படித்தவாறே உறங்கி விட்டேன். 'கல்லூரிகளில் தாய் மொழியே கற்பிக்கும் மொழியாக இருக்க வேண்டும்' என்று சட்ட சபையிலே நடந்த இனிமையான விவாதம் என் உளக் கண்ணைவிட்டு மறையவில்லை. திடீரெனப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் திரு. ஏ. எல். முதலியார் அவர்கள் என்னைத் தேடிக் கொண்டு வந்தார்கள்! நான் அவரை என் வகுப்பு மாணவர்களால் நடிக்கப் படும் நாடகக் காட்சி ஒன்றுக்கு அழைத்துச் சென்றேன். நாடக அரங்கிலே கணித ஆசிரியர் ஒருவர் பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்.]

மாணவர்கள் யாவரும் எழுந்து கீழ்க்கண்ட பாடலை இசையோடு பாடுகிறார்கள் :—

"நேராகும் நெடுநகரம்
சாலை பாலம்
நீர்த் தேக்கம் நிதி முதலாத்
திகழ்ந்தவாறும்
ஏராரும் எண் கணிதம்
எழுத்துங்கோடும்,
இவையோங்கித் தழைத்த
தனலாகும் மாதோ

கணித ஆசிரியர் : முத்து! வட்டத்தின் பரப்பளவைக் குறிக்கும் பண்டைய தமிழ்ப் பாடல் யாது?

முத்து : வட்டத்தரைக் கொண்டு
விட்டத்தரைத் தாக்கச்
சட்டென தோன்றுங் குழி.

ஆசிரியர் ; சரி; வடிவேலன்! இந்தப் பாடலின் வட்டத்தரை யென்பது எதைக் குறிக்கிறது?

வடிவேலன் : வட்டத்தின் சுற்றளவில் பாதியைக் குறிக்கிறது ஐயா!

ஆசிரியர் ; முழுமதி! 'விட்டத்தரை தாக்கச் சட்டென தோன்றுங் குழி' என்றால் என்ன பொருள்?

முழுமதி : விட்டத்தில் பாதியான ஆரத்தால் வட்டத்தின் சுற்றளவில் பாதியைப் பெருக்கினால் வட்டத்தின் பரப்பளவு எனப் பொருள்படும், ஐயா!

* * *

[மேலே கண்ட நாடக நிகழ்ச்சியைக் கண்ட துணைவேந்தர் (ஏ. எல். மு.) அவர்கள் "இது என்ன தமிழ் வகுப்பா? கணித வகுப்பா?" என்கிறார்.]

நான் : கணித வகுப்புதான்! முற்காலத்திலே நமது முன்னோர்கள் இவ்வளவு அழகாகத் தாய் மொழியிலே கணக்கைக் கற்பித்து வந்தார்கள்! இங்கே நாடக அரங்கிலே காணும் காட்சியைக் கல்லூரிகளிலே நாம் காணப்போதும் நாள் என்னாளோ?

துணை : வர வர இந்த மொழிச் சண்டையே பெரிதாகி விட்டது! நம் நாட்டவர்கள் எல்லோரும் மொழி வெறியர்களாகி விட்டார்கள்!

நான் : அப்படியானால் தாய் மொழிப் பற்று கூடாது என்கிறீர்களா?

... அப்படி யார் ... மொழி ... பற்று ...

வாக விளக்க இயலுமோ, அம் மொழியே 'உலகின் தலைச்சிறந்த பொது மொழி'யாகும். அத்தகையதொரு தலைச் சிறந்த நிலையை எட்டிப் பிடித்து எக்காளமிடுகிறது ஆங்கில மொழி! எனவே அந்த மொழியே கல்லூரிகளில் பயிற்சி மொழியாக இருக்கத் தகுதிவாய்ந்த மொழி. இதை மறுப்பவர்கள் யாவரும் மொழி வெறி' கொண்டவர்களே!

நான் : தனித்து ஒரு நாடும் இயங்க இயலாத இன்றைய நிலையில் ஆங்கிலம் உலக மொழியாக விளங்குவது நன்மையே! ஆனால் எல்லோரும் ஆங்கிலத்தையே கற்றுக் கொண்டு, நம் தாய் மொழிகளையெல்லாம் அழித்து விட இயலுமோ? தாய் மொழியும் வளர்ச்சிபெற வேண்டுமன்றோ? நாட்டின் பெரும்பான்மையான மக்கள் தாய் மொழிமட்டும் அறிந்தவர்களே! அவர்கள் யாவரும், அறிவியல், வானவியல் போன்ற ஆங்கில நூல்கள் கூறும் அதி அற்புதங்களை அறிந்து அதன் ஆனந்தத்தைப் பெற வேண்டாமோ? பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தாய் மொழியில் பெயர்த்தல் வேண்டாமோ? இப்பணியை யார் செய்வது? ஒருவரும் தானே முன்வராவிடில், முன் வரும்படி எப்படிச் செய்வது?

துணை : தாய்மொழியிலேயேஎல்லா பாடங்களையும் கற்பித்தால் மட்டும் எல்லா நன்மைகளும் ஏற்பட்டு விடுமா என்ன? இன்று ஆங்கிலத்தின் இடத்தை அடைய நம் தாய் மொழிகளுக்குச் சிறிதேனும் தகுதியுள்ளதா? தாய் மொழியில் எல்லா பாடங்களையும் கற்பிப்பதின் மூலமே மாணவர்களை முன்னேற்றிவிட முடியுமா என்ன? அவ்வளவு அவசரப்பட்டு ஆங்கிலத்தை அழித்து—அதனிடத்திலே தாய் மொழியைப் புகுத்த வேண்டியதன் அவசியம்தான் என்ன?

நான் : ஐயா! நம்முடைய தாய், நம் தந்தையோடு காதல்மொழி பேசிய மொழியே, நம் தாய் மொழி. நாம் இந்த உலகில் உண்டாகக் காரணமாக இருந்த நயுது தாயின்மொழி, பிறகு நமது நாக்கை அசைத்துப் பேச வைத்தது.

துணை: அந்தக் கதையெல்லாம் எனக்கு வேண்டாம்!

நான் : சரி! நம் தாயானவள் தாய் மொழியிலேயே நமக்குப் பலவற்றைக் கற்றுக் கொடுக்கிறாள். உலகைப் பற்றியும் உலகத்திலுள்ள எல்லாப் பொருள்களைப் பற்றியும் நாம் முதன் முதலில் அறிந்து கொள்வது நமது தாய்மொழி மூலமே! நாம் கற்கும் ஒவ்வொரு பொருளின் பெயரும், நமது வாழ்க்கையில் ஏற்படுகின்ற ஒவ்வொரு அனுபவங்களும், பிறரின் வாழ்க்கை அனுபவங்களை நாம் கேட்கின்ற போது நமக்கு ஏற்படுகின்ற எண்ணங்கள் யாவும் தாய் சொற்களாகத்தான் நமது உள்ளத் திரையிலே பதிவாகிறது. நம்மை ஒரு பாம்பு கடித்துவிட்டால், நாம் "ஐயோ! அம்மா! பாம்பு!" எனத் தாய் மொழியிலேதான் உணர்ச்சியை வெளிப்படுத்துகிறோமேயொழிய பிறர் மொழியிலே அல்ல. எனவே தாய் மொழிதான் நமது உள்ளத்தின் மொழி!

துணை; உள்ளத்தின் மொழிதான்! ஒப்புக் கொள்கிறேன்! ஆனால் அவைகளின் மூலமே எல்லா பாடங்களையும் கற்பிக்க இயலுமா? ஆங்கிலத்திலே படித்தறிந்த ஆசிரியர்கள் தமிழிலே எப்படிக் கற்பிக்க இயலும்?

நான் : ஆங்கிலத்திலே, அடுக்கு மொழியிலே, அழகு நடையிலே பேசும் பேச்சுத்திறன் கொண்டு ஆங்கிலத்தைத் தாய் மொழியாகக் கொள்ளாத அறிஞர்களில் பலர் முதன் முதலிலே தாய் மொழியிலே சிந்தித்துப் பிறகுதான் தன் எண்ணங்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துப் பேசுகிறார்கள். அதே போல் பல கல்லூரி ஆசிரியர்கள், அறிவியல் போன்ற பாடங்களை ஆங்கிலத்திலே படித்து, அதைத் தன் தாய் மொழியிலே சிந்தித்துப் புரிந்துகொண்டு, பிறகுதான் புரிந்துகொண்ட கருத்துக்களை ஆங்கிலத்திலே மொழிபெயர்த்து மாணவர்களுக்குக் கற்பிக்கிறார்கள். கல்லூரி மாணவர்கள், தன் ஆசிரியர் கூறும் ஆங்கிலப் பேச்சைக் கேட்டு, தன் மனத்தினுள் தாய் மொழியிலே மொழிபெயர்த்துப் பிறகுதான் புரிந்துகொள்கிறார்கள். தாய் மொழியிலே புரிந்து கொண்ட கருத்துக்களை, மறுபடியும் ஆங்கிலத்திலே மொழி பெயர்த்துதான் தேர்வில் எழுத வேண்டும்! இங்ஙனம் மொழி பெயர்ப்பில் இவ்வளவு காலம் ஏன் வீணாக்கப்பட வேண்டும்? தாய் மொழியிலேயே புரிந்து கொண்ட, தாய்மொழி பேசும் ஆசிரியர், வேண்டுமானால் மொழி பெயர்க்க இயலாத ஆங்கிலச் சொற்களைப் பயன்படுத்தி ஏன் மாணவர்களுக்குத் தாய் மொழியிலேயே கற்பிக்கக் கூடாது?

துணை: அப்படியானால் பிறமொழிகளைக் கலந்து தமிழைக் கொலை செய்யச் சொல்கிறீர்கள்! தாய்க் கொலை புரிதல் நன்றோ ஐயா?

நான்: அப்படிச் செய்ய வேண்டுமென்று யார் கூறியது? கற்பிக்கும் ஆசிரியர் தமிழறிவு மிக்கவராக இருந்தால் மேலே கூறியவாறு ஆங்கிலச் சொற்களைக் கூடப் பயன்படுத்தாது நல்ல தமிழிலே பாடம் சொல்லிக் கொடுக்கலாம்.

இங்ஙனம் அறிவியலையே தாய் மொழியில் நன்கு கற்பிக்க இயலுமென்றால் தமிழரசர்களான சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் வரலாற்றையும், அக்காலத்தின் ஆட்சிமுறை பற்றியும், ஏன் இங்கிலாந்து நாட்டின் ஆங்கிலத்திலே கற்பிக்க வேண்டும்? தாய் மொழியில் கற்பிப்பதால் மாணவர், தாய் மொழியிலேயே நன்கு சிந்தித்துப் புரிந்து கொள்கிறார்கள், சிறந்த சிந்தனையாளர்களாகிறார்கள். எனவே ஆராய்ச்சிகள் செய்து புதுப் புது உண்மைகளைக் கண்டுபிடித்து உலகம் புகழும் அறிவியல் அறிஞராவார்கள்!

துணை; நீங்கள் கூறுவதைப் பார்த்தால் தாய்மொழியில் கற்பித்தல் ஆங்கிலத்தில் கற்பிப்பதைவிடச் சிறந்ததுபோல் தோன்றுகிறதே!

நான்; தோன்றுகிறதா? உண்மை அதுதான் ஐயா! இன்று சோவியத் யூனியனில் உள்ள 16 குடியரசுகளிலே தாய் மொழியிலே தான் கற்பிக்கிறார்கள்! இதனால் ரஷ்யா பின் தங்கிவிட்டதா? மேலும் தாய்மொழியில் பாடங்களைக் கற்பித்தால், தாய்மொழியில் அறிவியல், கணிதம்போன்ற துறைகளில் ஏராளமான நூல்கள் போட்டி போட்டுக் கொண்டு வெளிவரும். இன்றைய உயர் நிலைப் பள்ளிகளே இதற்கு நற்சான்று நல்கும். முன்பு ஆங்கிலத்தில் கற்பித்த பொழுது தேர்ச்சி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கையும், தாய் மொழி மூலம் கற்பிக்கும் இன்று அதிகமான மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெறும் ஏராளமான மாணவர்களின் எண்ணிக்கையும் ஒப்பிட்டுப் பார்த்தால் தாய் மொழி மூலம் கற்பிப்பதினாலான நன்மைகள் நன்கு புலப்படும்.

துணை : சரி! அப்படியானால் உலகத்தோடு கருத்துக்களை பரிமாறிக் கொள்வது எப்படி?

❀ 10-ம் பக்கம் பார்க்க

வருந்துகிறோம்!

தென்னாட்டு அரசியல் துறையில் மூத்தவராயிருந்து; விடுதலைக் கிளர்ச்சிக்கு உடல், பொருள் தந்து, சிறைவாழ்வையும் அடக்கு முறைகளையும் தொடர்ந்துபெற்று, தியாக சீலராய் வாழ்ந்த திரு டாக்டர் வரதராசலு அவர்கள் மறைந்தது குறித்துப் பெரிதும் வருந்துகிறோம்.

தமிழகம் ஒரு உண்மையான தொண்டரை ...த்துவிட்டது. தாழ்த்தப்பட்ட மக்கள் தங்கள் ...முறை இழந்தார்கள்.

அவரது பிரிவால் வருந்தும் அவரது குடும்பத்... ...ரும், நண்பர்களுக்கும் கண்ணீருடன் ...ந்த அனுதாபத்தை உரிமையாக்கு...

—(ஆ-ர்)

பி. சி. கணேசன் பி. எஸ்ஸி., பி. டி.

என் வாழ்க்கையை எண்ணிப் பார்த்தால் எனக்கே அச்சமாகவும் அறுவறுப்பாகவும் இருக்கிறது. ஆனால், அதற்குமுன் நான் வாழ்ந்த வாழ்க்கையை எண்ணும் போது......!

மனச்சான்று—அந்த ஒன்று மட்டும் மனிதர்களின் செயல்களில் குறுக்கிடாமல் இருந்துவிட்டால், வாழ்க்கையின் எத்தனையோ பிரச்சினைகளுக்குச் சுலபமாக விடிவு ஏற்பட்டுவிடும்...அப்பப்பா, மனித சமுதாயம் தானாக வகுத்துக் கொண்டிருக்கும் நீதிகளும் நியதிகளும்...அந்தச் சிக்கலில் அடிபட்டு, வாழ முயன்று தோல்வியடைந்துபோனவர்களும், சிக்கலைத் துணிவோடு அறுத்தெறிந்து சீரான வாழ்க்கை பெற்றவர்களும்......

டால்ஸ்டாய் ஏதோ ஒரு கதையில் குறிப்பிடுகிறார்; பிடிபடும் வரையில் யாரும் திருடனல்ல என்று! பிடிபடாமல் திருடுகின்ற வரையில் திருட்டு குற்றமாவதில்லை. ஏமாளி அகப்பட்டுக் கொள்ளுகிறான்; குற்றவாளியாகிறான்; தண்டனை பெறுகிறான்! சட்டத்தின் கண்ணில் மண்ணைத் தூவுகின்றவன், சமுதாயத்தின் பார்வையை இருட்டாக்கி விட்டு சாகசச் செயல்களில் ஈடுபடுகிறவன், கெட்டிக்காரன் என்று பெயர் பெறுகிறான்—புகழடைகிறான். ஆகவே, குற்றம் செயலில் இல்லை; செயல்படும் பொழுது ஏற்படும் திறமைக் குறைவிலே இருக்கிறது. பசிக் கொடுமையால் ஒருபடி அரிசியைத் திருடுபவன் குற்றவாளி; ஆனால் பஞ்ச நிலைமையைத் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டு கொள்ளை லாபம் அடிக்கிறானே, அவனுக்குப் பெயர் கை தேர்ந்த வியாபாரி!

சிலந்திக் கூட்டிலே சிறிய பூச்சிகள்தானே அகப்பட்டுக் கொள்ளுகின்றன; பெரிய குளவிகள் துளைத்துக் கொண்டு ஓடிவிடுகின்றன அல்லவா?

நான் ஏதோ தத்துவம் பேசுகிறேன் என்றுதானே நினைக்கிறீர்கள்? வாழ்க்கையின் அப்பட்டமான உண்மைகள் தத்துவமானால், நான் பேசுவதும் தத்துவம்தான்!

முப்பது வயதுகூட முற்றுப் பெறாத ஒரு பெண்ணுக்கு வாழ்க்கையில் அப்படியென்ன அனுபவம் ஏற்பட்டிருக்க முடியும் என்றுதானே ஆச்சரியப்படுகிறீர்கள்? பத்து ஆண்டுகளுக்குமுன் நான் பரம ஏழை! ஆனால் இப்பொழுது......

இதோ 'ரேடியோ கிராம்' இன்னிசை வழங்கிக் கொண்டிருக்கிறது. நல்ல அழகான மாளிகையில் எல்லா விதமான வசதிகளோடும் வசிக்கிறேன்! எடுபிடிகள் எத்தனையோ பேர்! நினைத்த இடத்திற்குக் காலதாமதமின்றி போய்வர 'கான்சல்' கார்! எங்கு சென்றாலும் வரவேற்பு—எல்லோரும் புகழ் மாலை சூட்டுகிறார்கள்!

பரம ஏழைக்குப் பங்களா வாசமா? புதிராக இல்லை? அப்படி என்ன செய்தேன், பணம் சேர்க்க? பாடுபடவில்லை; நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைக்கவுமில்லை! பின்...? சுலபமான வழி—

மனச்சான்றுக்கு மதிப்புக் கொடுக்கும் பழக்கத்தை அடியோடு கைவிட்டேன்!

விளங்கவில்லையா? கேளுங்கள் என் கதையை!

★

அன்று என் மனம் அளவிட முடியாத வேதனைப்பட்டுக் கொண்டிருந்தது. என் அம்மா மரணத்தோடு போராடிக் கொண்டிருந்தாள். கடைசி மூச்சு தொண்டையிலே இழையோடிக் கொண்டிருந்தது. ஒரு 'ஆரோமைசின்' இஞ்செக்ஷனால் பிழைத்து விடுவாள்! ஆனால் அதற்குத் தேவையான பணம்...

கேவலம் மூன்று ரூபாய்... அதைச் சேகரிக்க என்னால் முடியவில்லை...ஏழை கஷ்டப்படும்பொழுது இருக்கின்றவர்களுடைய ஈர நெஞ்சங்கூட உலர்ந்துவிடும் போலிருக்கிறது. இதுவரையில் அன்புரை பேசி வந்த அக்கம் பக்கத்து வீட்டுக்காரர்கள்கூட என்னைக் கண்டவுடன் அச்சத்தால் முகத்தைத் திருப்பிக் கொண்டார்கள்...

சிறு குழந்தையாய் இருக்கும் பொழுதே தந்தையை இழந்துவிட்ட என்னை, எத்தனையோ இன்னல்களுக்கிடையே காப்பாற்றி வளர்த்து, ஆளாக்கிப் படிக்கவும் வைத்து, பள்ளியில் ஆசிரியையாகப் பத்துக் 'காசு' சம்பாதிக்கும் வசதியை ஏற்படுத்திக் கொடுத்த அந்த அன்னைத் தெய்வம் மரணவாயிலில் நின்று ஓலமிடும்போது, உதவி செய்ய வகையற்ற நான்...

மூன்று ரூபாய் பேரத்தில் என் அன்னையின் உயிர் ஊசலாடிக் கொண்டிருந்தது!

உயிரைக் காப்பாற்றும் சக்தி மருந்துக்கு இருக்கிறது; கடையில் மருந்தும் இருக்கிறது. கடையிலிருக்கும் மருந்து உடம்பில் சேர தடையாயிருக்கும் மூன்று ரூபாய்க் காசு, என் அன்னையின் உயிருக்கு முடிவில் எமனாக வாய்த்துவிட்டது!

அம்மா பிணமானாள்! அந்த ஜீவன் பிரியும் வேளையில் என்னென்ன எண்ணியதோ!

இருக்கின்றபொழுது ஏறெடுத்துப் பார்க்காதவர்கள், இறந்து போனவுடன் துக்கம் விசாரிக்க மந்தை மந்தையாகக் கூடினர். சம்பிரதாயமாம் சம்பிரதாயம்! மனிதன் எப்படிப்பட்ட போலி வாழ்க்கை வாழ்கிறான்—அதற்குத்தான் எவ்வளவு மதிப்பு!

என் வாழ்க்கையின் ஜீவ ஒளி அணைந்து போயிற்று. நான் துடிப்பில்லாத படகானேன்.

காலத்தின் வேகத்தில் சோகத்தின் சாயல் மெதுவாக மறைந்தது. அம்மா இல்லாத வாழ்க்கைக்கு மெதுவாகப் பழகிப் போனேன். ஆனால் ஏழ்மை ஏற்படுத்திய அந்தப் பயங்கர 'வடு' மட்டும் மறைவாகவே இருந்தது.

சில மாதங்களிலேயே, அனாதையாகிவிட்ட என்னை, அண்டிப் பிழைக்க, என் சிறிய தாயாரின் பெண்ணும், பிள்ளையும் வந்து சேர்ந்தார்கள். வாழ்க்கை இன்பத்தை அவர்களோடு பகிர்ந்து கொள்ளவில்லை; வறுமையைத்தான் பகிர்ந்து கொண்டேன்.

வருமானத்தை அதிகப்படுத்திக் கொள்ள மூன்று நான்கு குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக்கொடுக்க ஆரம்பித்தேன். மாதம் மூன்று ரூபாயும்

※ 8-ம் பக்கம் பார்க்க

பொதுச் செயலாளர் அனுதாபம்

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் டாக்டர் பி. வரதராசுலு (நாயுடு) அவர்கள் மறைவு குறித்து அறிவிப்பதாவது :—

தமிழகத்தில் அரசியல் விழிப்புணர்ச்சி ஏற்படுத்த அடிப்படைக் காரணமாக விளங்கியவர்களிலே முக்கியமான ஒருவரும், தமிழ்ச் செய்தித் தாள் உலகைச் செவ்வையாக்கிச் சீர்படுத்திப் பல எழுத்தாளர்களுக்கு ஆசிரியராயும் எடுத்துக் காட்டாயும் விளங்கியவரும், தமிழ்மொழி வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டவரும், தொழிலாளர் நலன் கருதி உழைத்து வந்தவரும், பிற்படுத்தப்பட்ட மக்கள்—ஒடுக்கப்பட்ட மக்கள் முன்னேற்றத்திற்கு அரும்பாடுபட்டவரும், யாருக்கும் அஞ்சாமல் துணிந்து செயலாற்றும் திறம் படைத்தவரும், மாற்றுக் கட்சியினராலும் நன்கு மதிக்கப்பட்டவருமான அருந் தலைவர் டாக்டர் வரதராசுலு அவர்கள் இயற்கையெய்திய செய்திகேட்டுத் திடுக்குற்றேன்.

துக்கமும் துயரமும் உள்ளத்தைக் குடைகின்றன..தமிழகம் ஓர் அரசியலறிஞரை இழந்து தவிக்கும் நிலை அவரது இழப்பால் ஏற்பட்டுள்ளது. அவரைப் பிரிந்து வருந்தும் அவரது குடும்பத்தினருக்கும், உற்றார், உறவினர், நண்பர் ஆகியோருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதைத் தவிர வேறு என்ன ஆறுதல் சொல்ல இயலும்.

அவரது தொண்டுகள் பிறருக்கு எடுத்துக் காட்டுக்களாக அமையுமாக! அவரது பெயரும், புகழும் நீடூழிக் காலம் நிலைபெறுவதாக!

கழனிகள் களங்களாக மாறும்!

[19—7—67 அன்று சென்னை சட்டசபையில் தோழர் மு. கருணாநிதி அவர்கள் விவசாய மானிய கோரிக்கை வெட்டுப் பிரேரணையை ஆதரித்துப் பேசுகையில் குறிப்பிட்டவை இங்கு தரப்பட்டிருக்கிறது.]

"விவசாயத்தை நம்பியும் விவசாயத்தால் பெருமை பெற்றும் திகழ்கின்ற நமது நாட்டில், விவசாயத்திற்கு மிக மிக முக்கியமானது நல்ல விதை தான். அத்தகைய நல்ல விதைகளை வளர்த்துத் தருகிற பொறுப்பை மாநில அரசு ஏற்றிருக்கிறது என்று கனம் நிதி அமைச்சர் தந்த அறிக்கையிலும் நேற்றைய தினம் விரிவுரை ஆற்றிய விவசாய அமைச்சருடைய பேச்சிலும் காணப்படுகின்றது. நல்ல விதைகளைத் தருவதற்காக 400 விதைப் பண்ணைகள் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நிறுவப்படும் என சென்னை அரசாங்கத்தினுடைய செய்தித் துறை வெளியிட்டான 'உழவனுக்கு' என்ற நூலில் காணப்படுகிறது. அதே நேரத்தில் 400 விதைப் பண்ணைகளை நிச்சயமாக நிறுவுவார்கள் என்று மகிழ்ச்சி பெற்றாலும், நிதி அமைச்சருடைய நிதி நிலை அறிக்கையிலும், விவசாய அமைச்சருடைய பேச்சிலும் புலப்படும் 360 பண்ணைகள் தான் நிறுவப்படும் என்ற செய்தியையும் ஒப்பிட்டுப் பார்த்தால் 40 பண்ணைகள் குறைந்து போனதாகத் தெரிய வருகிறது...

[அமைச்சர் பக்தவத்சலம்: தென் கன்னடம், மலையாளம் முதலிய பிரதேசங்கள் சேர்ந்து இருந்த காலத்தில் ப்ளானிங் கமிஷனால் நிறுவப்படுவதாக உத்தேசிக்கப்பட்டிருந்தது; அவைகள் இப்போது பிரிந்து போய் விட்டபடியால், அவை 360-க்குக் குறைந்து போய் விட்டது என்பதை மட்டும் கனம் அங்கத்தினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.]

'உழவனுக்கு' என்கிற அரசினர் நூலில் வந்த செய்தியையும், புள்ளி விபரங்களையும் வைத்துக் கொண்டுதான் நான் சொன்னேன்; பரவாயில்லை. இந்த 360 விதைப் பண்ணைகளை வைத்துக் கொண்டு நல்ல விதைகளைக் கொடுக்க முடியும் என்று கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் அது எந்த அளவில் விவசாயிகளுக்குச் சேரப் போகிறது; எந்த அளவில் அவர்கள் அனுகூலம் அடையப் போகிறார்கள் என்பது தெரியவில்லை.

விவசாயிகளும், மற்றும் தொழிலாளர்களும், இந்த மானியத்தில் உள்ளடங்கி இருக்கும் மீனவர்களும் எந்த அளவில் பலனடையப் போகிறார்கள் என்பதும் தெரியவில்லை.

பனிக் கட்டியானது ஒருவருடைய கையிலிருந்து பத்து பேருடைய கைக்கு மாறும்போது, கடைசியில் போய்ச் சேருபவர் கையில் ஒன்றும் இல்லாமல் போய் விடும். அந்த அளவில்தான் இந்த விதைகளையும், கடனையும், விவசாயக் கருவிகளையும் விநியோகம் செய்யும்முறை ஆகி விடுகின்றது. இடையே உள்ளவர்கள் அந்த அளவுக்கு அவைகளைப் பகிர்ந்து கொள்ளுகிறார்கள்.

முந்திரித் தொழில்

விவசாயக் கல்லூரி ஒன்று கோவையில் இருக்கிறது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 1956—57-ல் மட்டும் இந்தக் கல்லூரிக்கு ரூ. 7 இலட்சம் செலவிடப்படும் என்று அரசாங்கச் செய்தித் துறை வெளியிட்டுள்ள 'உழவனுக்கு' என்ற நூலில் 24-ம் பக்கத்தில் பார்த்தேன். ரூ. 7 இலட்சம் அதற்கென்று செலவிடப்படுவதாக இருந்தால் உள்ளபடியே அதைக் கண்டு எல்லோரும் மகிழ்ச்சி அடைய வேண்டியதுதான்.

இந்த ஆண்டில், கனம் நிதி அமைச்சர் அவர்கள், விவசாயக் கல்லூரித் துறைக்கு ரூ. 5,96 இலட்சம் ஒதுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார். 1956—57-ல் ரூ 7 இலட்சம் விவசாயக் கல்லூரிக்கு ஒதுக்கிவிட்டு, இப்போது ஐந்து இலட்சத்து சொச்சம் ரூபாய் ஒதுக்குவதாக இருந்தால் அதைக் கண்டு நாம் பூரிப்பு அடையக் கூடிய நிலையில் இல்லை என்பதை மட்டும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

முந்திரித் தொழிலைப் பற்றி நான் சிறிது கூற விரும்புகிறேன் —அடிக்கடி நான் முந்திரித் தொழிலைப் பற்றி குறிப்பிடுகிறேன் என்று நினைக்க வேண்டாம்—முந்திரித் தொழில் சம்பந்தமாக இங்கே ஒன்றை எடுத்துக்காட்டாமல் இருக்க முடியாது: நல்ல காரியத்திற்காகவே நெய்வேலிப் பகுதியில் பல முந்திரிக் காடுகள் அழிக்கப் படக்கூடிய நிலையில் இருக்கின்றன. அரசினர் முந்திரிக் காடுகளை உற்பத்தி செய்வதற்கும் முந்திரி பயிரிடுவதற்கும் புதிய புதிய இடங்களைத் தேடி அலையாமல், நெய்வேலியில் முந்திரிக் காடுகள் அழிக்கப்படுவதால் பாதிக்கப்படுகிறவர்களிடம் நஷ்ட ஈடு கொடுத்தால், அதை வைத்துக் கொண்டு அவர்களே இடத்தை வாங்கிப் பயிரிடுவதற்குத் தயாராக இருக்கிறார்கள் என்பதை கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வனஸ்பதி ஆலை

கடந்த மாதத்தில் நான் விழுப்புரம் சென்றிருந்தேன்; அப்போது புகைவண்டி நிலையத்திற்குப் பக்கத்தில் ஒரு புதிய ஆலை இருப்பதைப் பார்த்தேன். அது என்ன என்று கேட்டதற்கு மணிலாக் கொட்டையிலிருந்து 'வனஸ்பதி'யைத் தயாரிக்கக் கூடிய ஆலை என்று கூறினார்கள். ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு அரசாங்கத்திடமிருந்து ரூ 10 இலட்சம் கடன் வாங்கி வனஸ்பதி உற்பத்தி செய்வதற்கு என்று ஆலையை அமைத்தார்கள் என்றும், கட்டிடங்களைக் கட்டிவிட்டு இயந்திரங்களை வரவழைத்து அவைகளையும் அங்கு அமைத்தார்கள் என்றும், அதன் பிறகு அந்த ஆலை வேலை செய்யவில்லை என்றும் சொன்னார்கள்.

கட்டிடங்கள் கட்டி இயந்திரங்கள் அமைத்தும் ஆலை வேலை செய்யவில்லை என்பதோடு

"வேதாளம் சேருமே; வெள்ளெருக்குப் பூக்குமே
பாதாள மூலி படருமே"

என்ற பழைய பாடல் ஒன்றை ஞாபகமூட்டுவதாகவும் இருக்கிறது அந்த இடம்

'புற்றை' ஒழிப்போம்—புதுப் பாதை அமைப்போம்!

"சமுதாயத்தில் சாதி மனப்பான்மையை ஒழித்து சாதி பாகுபாடுகளையும் நீக்க வேண்டும். சாதிப் பாகுபாட்டை யார் ஆதரித்தாலும் சரி—எந்த உரிமையின் பெயரால் ஆதரித்தாலும் சரி—எத்தனை பழைய ஏடுகளை எடுத்துக் காட்டினாலும் சரி-சாதி பேதம் கூடவே கூடாது.

இந்தச் சமுதாயத்தில் சாதி மனப்பான்மை மாற்றப் பட்டால் ஒழிய, கலப்புத் திருமணத்தால் பிறக்கின்ற குழந்தைகள் தாங்கள் மணம் செய்து கொள்ளுகின்ற நேரத்தில் நல்லபடியாக சமுதாயத்தில் ஏற்றுக் கொள்ளப் படமாட்டார்கள்.

ஆர்வத்தின் காரணமாக கலப்புத் திருமணம் செய்து கொண்டு பின்னர் அதன் மூலம் பிறக்கின்ற குழந்தைகள் சமுதாயத்தில் ஏற்றுக்கொள்ளப்படாத நிலைமை நீடித்தால் பிரச்சினை தீர்ந்து விட்டதாகக் கருத முடியாது.

ஆகவே, கலப்புத் திருமணம் அதிகமாகப் பரவ வேண்டுமானால் அடிப்படையிலே நாட்டிலுள்ள சாதி மனப்பான்மை ஒழிக்கப்பட வேண்டுமென்பதை அறிவும் ஆர்வமும் உடைய அமைச்சருக்கும், இப்பேரவையின் உறுப்பினர்களுக்கும் சபாநாயகரின் மூலமாக கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

கலப்புத் திருமணம் என்பது இலட்சியத்திற்காகச் செய்யப்படுவது மாத்திரம் அல்லாமல், நம் சமுதாயத்தையே மாற்றியமைக்க எடுத்துக் கொள்ளப்படுகிற ஒரு தேசிய முயற்சியாக இருக்கவேண்டும். இந்த தேசிய முயற்சி, முயற்சி அளவிலே இல்லாமல் நிச்சயமாகச் செயல்பட வேண்டும்; அப்போதுதான் நிச்சயமாக சாதி பேதத்தை ஒழிக்க முடியும். ஆகவே, உடனடியாக சாதி பேதத்தைப் போக்குவதற்காக நல்ல சீர்திருத்தப் பிரச்சாரத்தில் நாட்டை ஆளுகின்ற சர்க்கார்—சகல துறைகளிலும் திட்டங்களிலும்—ஈடுபட்டாக வேண்டும்.

சாதியை உண்டாக்கியவர்கள் திருந்தி விட்டார்கள்; உலகப் போக்கை உணர்ந்த மாறி விட்டார்கள். ஆனால், இதர சாதிக்காரர்களால் விளையும் தொல்லைதான் அதிகம் என்பதாகக் குற்றம் சாட்டுகிறார்கள்; உண்மைதான்!

சாதிப் புற்று தோன்றிவிட்டதால், அதிலே தோன்றியவை பலப்பல இன்றைக்கும் கிராமப்புறங்களிலே தம் உரிமைகளை நிலைநாட்டிக் கொள்வதற்குப் போராடத்தான் போராடுகின்றன. தூங்கிக் கொண்டிருப்பவனைத் தேளும் கொட்டும்; பாச்சையும் கடிக்கும்; ஏமாந்தால் பாம்பும்கூட காலைச் சுற்றிக் கொள்ளும். 'இவற்றில் எதற்கு கொடிய விஷம் அதிகம் என்பதல்ல பிரச்சினை; எந்தப் புற்றிலிருந்து இவை வெளிப்பட்டவை எனக் கண்டுபிடித்து அந்தப் புற்றையே அழித்தால் ஒழிய அதிலிருந்து கிளம்புகின்ற விஷ ஜந்துக்கள்—தேள், பூச்சை, பாம்பு—நாட்டிலே ஊர்விக் கொண்டுதான் இருக்கும். புற்றையே அழிக்கும் வேலையில் மிக மிகத் துரிதமாக நாம் ஈடுபட்டாக வேண்டும்!"

—சட்டசபையில் அறிஞர் அண்ணா

குமரிக் கடலில் முத்தெடுப்பீர்- விவசாயக் கல்லூரி வளர்ப்பீர்!

கட்டிடம் சீரழிந்து சிறப்பிழந்து, இயந்திரங்கள் துருப்பிடித்துப்போன நிலையில் காணப்படுகின்றன. இதை உடனடியாகக் கவனித்து அந்த 'வனஸ்பதி' ஆலைக்கு மீண்டும் புத்துயிர் அளித்து, அதனால் அங்கு விளையும்மணிலாக்கொட்டை அங்குள்ளவர்களுக்கு உள்ளபடியே பயனளிக்கக்கூடிய நிலையை உண்டாக்கி, அதன் மூலம் தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள தொழிலாளர்களைப் பயனடையச் செய்ய வேண்டும்.

கன்னியாகுமரி முத்து

நேற்றைய தினம் அமைச்சர் அவர்களுடைய உரையில், வேறு ஒரு உரையிலும் காணப்படாத ஒரு நல்ல செய்தியை வெளியிட்டிருக்கிறார்கள். தூத்துக்குடியில் ஆண்டுதோறும் முத்துக் குளித்தல் நடைபெறுமென்றும் அதனால் அரசாங்கம் கணிசமான வருமானத்தைப் பெறலாம் என்றும் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இந்த நேரத்தில் அமைச்சர் அவர்களுக்கு—கனம் சபாநாயகர் வாயிலாக—ஒன்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். 1524-ம் ஆண்டில் போர்த்துகீசியர் இந்த நாட்டிலே வந்த காலத்திலே கன்னியாகுமரியில் முத்தெடுக்கும் தொழில் மிக மிகச் சிறப்பாக நடைபெற்றது என்றும், அதன் பிறகு பிரிட்டிஷார் ஆதிக்கத்தின்கீழ் இந்த நாடு வந்தபிறகு மதுரை நாயக்கர்களும், இராமனாதபுரம் அரசர்களும், எட்டையபுரம் இராசாக்களும் அந்தத் தொழிலை அங்குள்ள மீனவர்களைக் கொண்டு திறம்பட நடத்தினார்கள் என்றும் சரித்திரத்தில் பார்க்கிறோம்.

இன்றைய தினம் கூட கன்னியாகுமரி முனையிலிருந்து, இராமேசுவரம் வரையுள்ள கடற்பரப்பில் நல்ல முத்துச் சிப்பிகள் விளையும் பாறைகள் ஏராளமாக இருக்கின்றன. என்றும், பரிசிலனை நடத்தினால் நல்ல முத்துக்களைப் பெறலாம் என்றும் அந்த மாவட்டத்திலுள்ள பெருமீன்பிடிலோர் கூறுகிறார்கள். அதையும் கவனித்தால், கிரேக்கம், யவனம் போன்ற வெளி நாடுகளுக்குச் சென்று தமிழகத்தின் பெருமையை எப்படி முத்துக்கள் அன்றொரு நாள் உயர்த்தினவோ அதேபோல இன்றும் தமிழகத்தின் பெருமையை வெளிநாடுகளில் உயர்த்துவதற்கு ஆவைகள் பயன்படும் என்று நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

நங்கவரம் நிலை

விவசாயத்திற்கு மிக மிக முக்கியமானவை விதை, இரசாயன எரு என்பதோடு மாத்திரமல்ல— நீர்ப்பாசனம் என்பதோடு மாத்திரமல்ல— விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிற விவசாயிகளும் முக்கியமானவர்கள் என்பதையும் நான் இங்கே எடுத்துக்காட்ட வேண்டிய அவசியம் இல்லை என்றே கருதுகிறேன்.

விவசாயிகள் வளத்தோடு வாழ்ந்தால்தான்— அவர்களுடைய கண்ணீர் துடைக்கப்பட்டு களிப்பு ஏற்பட்டால்தான் விவசாயம் நல்ல முறையில் நாட்டில் பெருக முடியும் என்பதையும் விவசாய அமைச்சர் அவர்கள் உணராதவர் அல்ல!

ஆனால் குறிப்பாக, என்னுடைய குளித்தலைத் தொகுதியைப் பற்றி ஒன்று கூற விரும்புகின்றேன். அங்கே இருக்கும் நங்கவரம் பகுதியில் விவசாயத் தொழிலாளர்கள் 'முச்சலிகா' என்ற அடிமை முறிச் சீட்டுக்கு ஆட்பட்டு, அந்த அடிமை முறிச்சீட்டை 10, 15 ஆண்டுகளுக்கு முன் அம்மாதிரி எழுதிக் கொடுத்திருந்த காரணத்தால் இன்றைய தினம் அவர்கள் கூலிகளாகக் கருதப்பட்டு, 'சாகுபடியாளர், விவசாயி' என்ற பட்டியலிலிருந்து தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

'இன்றைக்கு நியாயவாரச் சட்டத்தின் விளைவைத் துர்விநியோகப்படுத்துகிற வாக்கு வன்மைபடைத்த வழக்கறிஞர்களும், மற்றவர்களும், மிராசுதார்களும் அந்த விவசாயிகளுடைய நிலைமையை மிக மிகத் தாழ்த்திவிட்ட காரணத்தால், 'ரெண்ட் கோர்ட்டிலும், வேறு கோர்ட்டுகளிலும் நடைபெறும் வழக்குகள் 300-க்கு மேல் ஏற்பட்டுவிட்டன.

அங்கு இருக்கும் மிராசுதார்கள் விவசாயிகளுக்குச் சொல்லி விட்டார்கள்— 'நடைபெறும் 300 வழக்குகளும் விசாரிக்கப்பட்டு முடிவு கூறிய பிறகுதான் நீங்கள் எல்லாம் எங்கள் நிலத்தில் இறங்க வேண்டும்; அதுவரை கூலி - அடிமை முறையில் சீட்டு எழுதிக் கொடுத்து விட்டுத் தான் இறங்க வேண்டும்',—என்று! அதன் காரணமாகத்தான் இன்று விவசாயிகள் நிலத்திலே இறங்குவதற்கு அஞ்சி இருக்கிறார்கள் — நிலத்திலே இறங்கினால் கைது செய்யப்படுவோம் என்ற பீதியுடன்!

மூன்று நாட்களுக்கு முன்பு —அதாவது, சென்ற ஞாயிற்றுக் கிழமையன்று நடந்த நிகழ்ச்சி ஒன்றைக் குறிப்பிட விரும்புகின்றேன்! குளித்தலையில் நிகழ்ந்த விவசாயிகள் கோரிக்கை தினத்தன்று காலையில் 8 விவசாயிகள் போலீசாரால் கைது செய்யப்பட்டார்கள். அந்த அளவுக்கு நிலத்திலே இறங்கிய விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இதே நிலைமை நீடிக்குமானால் 8 ஆயிரம், 9 ஆயிரம் ஏக்கரா நிலத்தில் சாகுபடி நின்றுவிடக் கூடிய நிலைமையும், விவசாயம் ஒழுங்காக நடைபெற முடியாத நிலைமையும் குளித்தலைத் தொகுதியில் நங்கவரம் பகுதியில் ஏற்படும் என்றும் கழனிகள் களங்களாகும் என்றும் கூறி இத்தகைய விவசாயிகளுடைய நிலைமை பரிசீலிக்கப்பட்டு, அவர்களுக்கு உடனடியாக உதவி செய்யாமல், விவசாயம் செழிப்படையச் செய்தவர்களாகவும், விவசாயிகளுடைய தேவையை நாம் உணர்ந்தவர்களாகவும் ஆவோம் என்று எடுத்துரைக்க விரும்புகிறேன்"

பதிஞேராவது திருவிளையாடல்!

எந்தத் தொகுதியில் எந்தச் சாதியார் பெருவாரியாக இல்லையோ அந்தத் தொகுதியில் அவர்களுக்கு ஆதரவு கிடைப்பதில்லை. இந்த நேரத்தில் எனக்கு தமிழில் வழங்கும் ஒரு கொச்சைப் பழமொழி நினைவுக்கு வருகிறது. 'சாதி சோறு போடுமா?' என்பர்; நம்முடைய சாதியைச் சேர்ந்தவர் என்கிற காரணத்திற்காக ஒருவனுடைய வறுமைக் காலத்தில் யாராவது அவனுக்கு சோறு போடுகிறார்களா என்று பார்த்தால் கிடையாது. ஆனால், தேர்தல் காலத்தில் சாதியை சொல்லித்தான் ஓட்டு கேட்கிறார்கள் 'நமக்குள் எவ்வளவோ இருக்கலாம். ஆனால் நாம் எல்லாம்...' என்று சொல்வதற்குள்ளேயே, 'ஆமாம் ஆமாம்; உங்களைத் தவிர வேறு யாருக்காவது ஓட்டு போடுவேனா?' என்று அவனும் ஒப்புக் கொள்கிறான்.

எந்தச் சாதி பெருவாரியாக ஒரு தொகுதியில் இருக்கிறதோ அந்த சாதியைச் சேர்ந்தவர்கள்தான் கவனிக்கப்படுகிறார்கள், ஆகையினாலே சாதியினால் கிடைக்கக்கூடிய இலாபத்தைப் போக்க தேவையான அளவில் இந்த அடிப்படைப் பிரச்சினையாகிய சாதி பேதத்தை மாற்றியமைக்க நாட்டை ஆளுகின்ற சர்க்கார் நல்ல முறையில் திட்டங்களை வகுத்து, தீவிரமாகப் பிரச்சாரத்தில் ஈடுபட வேண்டும். இந்தப் பிரச்சாரத்திற்கு 'அரிசன தினம்' மிகப் பொருத்தமானதாக இருக்கும்; 'அரிசன தின'த்தில் இதற்கான மன மாற்றத்தை மக்களிடத்திலே ஏற்படுத்துவதற்கு நல்ல முறையில் பிரச்சாரம் நடத்தவேண்டும்.

சாதாரணமாக பல விஷயங்களை நாம் கனவு காண்கிறோம்; நான் கண்ட அப்படிப்பட்ட ஒரு கனவை சபாநாயகர் மூலமாக இந்தச் சபைக்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஆண்டவன் எத்தனையோ பெரிய திருவிளையாடல்களைப் புரிந்திருக்கிறான் என்பதை புராணங்களைப் படித்து அறிந்துகொள்ளலாம்; 'பலப்பல திருவிளையாடல்களைப் புரிந்த ஆண்டவன், இந்த நூற்றாண்டிலே ஒரு புதிய திருவிளையாடலைப் புரியமாட்டானா? ஒரு நாள் இரவு தூங்கிக் கொண்டிருக்கும் நேரத்தில், நம் வீட்டிலிருந்து நாலைந்து பேர்கள் அவர்கள் வீட்டிற்கும், அவர்கள் வீட்டிலிருக்கும் நாலைந்து பேர்கள் நம்முடைய வீட்டிற்கும் வந்துவிட்டால் விடிந்து பார்க்கும்போது இரண்டு பேர்களும் ஒன்றாகச் சேர்ந்து கலந்துவிட்ட திருவிளையாடலை ஆண்டவன் புரிய, அதைக் காண்பவனில் நான் முதல்வனாக இருக்கமாட்டேனா?'—என்று கனவு காண்பது உண்டு.

ஆனால் அந்த ஆண்டவன் தம்முடைய திருவிளையாடல்களை பத்தோடு நிறுத்திக் கொண்டு விட்டான். மனிதர்கள்தான் அதைப்போல இப்போது செய்ய வேண்டும். அப்படிச் செய்வதற்கு இந்த மாதிரி சபையைவிட திறமையான மந்திரிசபை காங்கிரஸ் கட்சியிலேயே இல்லை'என்று சொல்லிக்கொள்ள பெருமைப் படுகிறேன்.

—சட்டசபையில் அறிஞர் அண்ணா

பாகிஸ்தானுக்கு ஒரு ஜின்னா! திராவிடத்துக்கு ஒரு அண்ணா!

[தென்னாட்டுப் பிரிவினை குறித்தும்; பிரிவினை கோரும் திராவிட முன்னேற்றக் கழகம் குறித்தும் வடவர்கள் எப்படிக் கருதுகிறார்கள்—என்பதை விளக்குகிறது, 'அமிர்தபஜார் பத்திரிகா'வில் வெளியாகியிருக்கும் இந்தக் கட்டுரை!]

ஜூலை 5-ந் தேதியன்று சென்னை சட்டசபையில், வரவு செலவுத் திட்ட விவாதத்திற்குப் பதிலளிக்கும்போது நிதி மந்திரி சுப்பிரமணியம், தி. மு. க. எதிர்க் கட்சியினரை, 'தென்னாட்டிற்கு என்று ஒரு தனி அரசு வேண்டும் என்ற கோரிக்கையை ஒரு பத்து ஆண்டு காலத்திற்கு எழுப்பாதீர்கள்' என்று 'சமரசம்' கோரினார்.

இது ஒரு பொறுப்பற்ற—அலட்சியப்படுத்தக்கூடிய—எண்ணிக்கையில் சொற்பமான சில கிளர்ச்சிக்காரர்கள் எழுப்பும் அற்பக் கூச்சல் அல்ல; மாறாக அது, முறையாக வளர்ந்துள்ள ஒரு அரசியல் கட்சி நடத்துகிற தீவிரமான அரசியல் இயக்கமாகும். இத்தகைய ஒரு பொறுப்புள்ள மந்திரி, இந்தக் கிளர்ச்சி குறித்து அரசாங்க ரீதியான கவனம் செலுத்தியாக வேண்டும் என்று கருதியிருக்கிறார் என்ற உண்மையிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

மேலும், இந்தக் கிளர்ச்சியை நிதி மந்திரி கண்டிக்கவில்லை; ஒரு 'பத்தாண்டு சமரசம்'தான் கோரியிருக்கிறார்.

இப்படி 'பத்தாண்டு சமரசம்' என்ற நாகரிகமான வேண்டுகோள்கூட, குறுகிய மாகாணப் பொருளாதார நலனைத்தான் அடிப்படையாகக் கொண்டிருக்கிறது.

தேசிய ஒற்றுமை என்ற உயர்ந்த இலட்சியத்தை வற்புறுத்தி, திரு. சுப்பிரமணியம், பிரச்சினையை ஒரு உயர்ந்த அரசியல், மற்றும் ஒழுங்கு நிலைக்கும் உயர்த்தவில்லை வேலை வாய்ப்புகளைப் பெருக்குவது, மற்றும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது என்ற இரு நோக்கங்களின்படி, சென்னை ராஜ்யத்தில் கனரகத் தொழில்கள் நிறுவப்பட வேண்டும் என்பதை வற்புறுத்திய அவர், அன்னிய மூலதனம் இன்றி தொழில் மயமாக்கும் வேலையைத் தொடர்ந்து நடத்தமுடியாது என்பதையும் சுட்டிக் காட்டினார், அன்னிய மூலதனம் பெறுவதற்கு, தமிழ் நாடு தனி நாடாக வேண்டும் என்று கோருவது வழியல்ல—என்றும் தி. மு. கழகத்தை அவர் எச்சரித்திருக்கிறார்; எனவேதான், 'பத்து ஆண்டு கால சமரசம்' வேண்டும் என்று கோரியிருக்கிறார்.

திரு. சுப்பிரமணியம் சாதுர்யமாகத்தான் வாதாடியிருக்கிறார்; ஆனால், அந்த வாதத்தில் விவேகம் இல்லை. ஒரு உருவான அரசியல் கட்சியின் தலைமையில் நடைபெறும் பிரிவினை இயக்கம் வலுப்பெற்று வரும் ஒரு மாநிலத்திற்கு, அன்னிய மூலதனம் கிடைக்காது என்பதை அவர் உணர்ந்திருக்கிறார்.

அதேபோது, அந்த இயக்கத்தின் கர்த்தாக்களும் தன்னைப் போலவே, 'மாநிலம் தொழில் மயமாக வேண்டும்,' என்பதில் அக்கறை கொண்டவர்கள் என்பதையும் உணர்ந்திருக்கிறார். எனவே, அவர் (நிதி மந்திரி) உடனடியான பொருளாதார முன்னேற்றத்திற்காக ஏதாவது 'விலை' கொடுக்குமாறு கேட்டிருக்கிறார்; அதாவது அவர்கள் ஒரு பத்தாண்டு காலத்திற்கு தங்கள் இயக்கத்தை ஒத்தி வைக்கட்டும்; தமிழ் நாட்டில் எவ்வளவு முடியுமோ அவ்வளவு கனரகத் தொழில்களைத் துவங்கப் பெறுவதற்கான சர்க்கார் முயற்சிக்கு ஒத்துழைக்கட்டும் என்று கேட்டிருக்கிறார். பத்தாண்டுகளுக்குப் பிறகு என்ன நிகழும்? இந்தச் சந்தர்ப்பத்தில் 'சமரசம்' என்ற சொல் முழுவதும் அர்த்தமற்றது அல்ல என்றால் தொழில் மயமான தமிழ் நாட்டில், தனி நாடு கிளர்ச்சி புதிதாகத் துவங்கும்.

ஒரு அத்தியாவசியமான பொருளாதாரத் திட்டத்தை இடையூறு இன்றி நிறைவேற்றுவதற்காக ஒரு இடைக்காலம்—'சிறிது நாள் ஓய்வு' வேண்டும் என்று அமைச்சர் அக்கறைகாட்டியிருக்கிறார் என்பதில் சந்தேகமில்லை. இந்தத் தியாகத்தை ஒத்தி வைப்பதில் உள்ள கேட்டினை அவர் முழுவதும் உணர்ந்ததாகத் தெரியவில்லை.

இக்கட்டிற்கு ஆளாகிவிட்ட நிலையில் அந்த நிதிமந்திரி, இந்த சமரச காலத்தில் இந்த இயக்கம் வலுவிழந்து விடும்; கவனிப்பாரற்றுப் போய் விடும்; பொருளாதாரத் திட்டங்களின் மூலமாக மலரும் வளமான புதிய இந்தியாவில் பிரதேச, மாகாண வெறி கொண்ட உணர்ச்சிகள் முக்கியத்துவம் இழந்துவிடும் என்று நம்பியிருக்கலாம். 'பழமொழிப் பூனை போல ஒவ்வொரு பிரிவினை இயக்கத்திற்கும் ஒன்பது உயிர்கள் உண்டு' என்று சரித்திரம் நமக்குப் போதிக்கிறது. சௌத்ரி முகமது அலி, முதல் முதலில் இந்தியாவில் முஸ்லீம்

❋ 10-ம் பக்கம் பார்க்க

புரியாத வாழ்க்கை . . .

❋ 5-ம் பக்கத் தொடர்ச்சி

உழைத்தபின் ஐந்து ரூபாய்க் காசு பெற அவர்கள் வீட்டிற்கு நடையாய் நடக்க வேண்டும். வாழ்க்கை ஓடவில்லை; ஓட்டினேன்!

ஃ ஃ ஃ

எங்கள் வீட்டுக்கு எதிரில் ஒரு வீடு! அங்கேயும் என்னைப் போல் ஒரு பெண் இருந்தாள். அவளை நம்பி அரை டஜன் பேர் வாழ்ந்தார்கள். வறுமைத் தேள் அவர்களைக் கொட்டவில்லை. வாட்டமற்று வளமாக வாழ்ந்தனர். அந்தப் பெண் நிறைய சம்பாதித்தாள். அவள் உடல்தான் அவளுக்கு மூலதனம்.

ஒரு நாள் நடுநிசி! எதிர் வீட்டிலிருந்து வாசனை 'கம்'மென்று வீசியது. தூக்கம் பிடிக்காமையால் எழுந்து ஜன்னல் வழியாக அவள் வீட்டைப் பார்த்தேன். வெளியில், அவள் வீட்டு வாயிற்படியில் 'கார்' நின்று கொண்டிருந்தது. புரிந்து கொண்டேன்—பணம் படைத்த யாரோ ஒருவன் தன் மிருகப் பசிக்கு அவளை விருந்தாக்கிக் கொண்டிருக்கிறான்.

என்ன ஈனமான வாழ்வு! என் மனம் குமுறியது. ஆனால், அவள் உடலை மூலதனமாக்கினால்தான், நாளை அந்த ஜீவன்கள் நிம்மதியாகவும்—சற்று ஆடம்பரமாகவும்கூட வாழ முடியும் என்பதை எண்ணிய போது...படுக்கையில் உட்கார்ந்த என் உருவம் எதிரிலுள்ள கண்ணாடியில் பிரதிபலித்தது...அந்த அமைதியான இரவில் என் அழகு என்னையே பிரமிக்க வைத்தது. முடக்கி வைக்கப்பட்டிருக்கும் இந்த அழகு செலாவணியாகும் மூலதனமாக்கப் பட்டால்...ஏனோ என்னையறியாமல் தேம்பித் தேம்பி அழுதேன். இரவெல்லாம் மனம் பேயாட்டம் போட்டது...

மறுநாள் புனர்வாழ்வு பெற்றேன். என் நடை, உடை, பாவனைகள் மாறின. அடக்கமே உருவான நான், ஆடம்பரச் செல்வியாய் தெருக்களில் அன்ன நடை பயின்றேன். எவரையும் ஏறெடுத்துப் பார்க்காத விழிகள் எங்கெங்கோ வட்டமிட்டன. பெருமூச்சு விட்டு தூரத்தில் நின்றே ஏங்கியவர்களிடம் பேச்சுக் கொடுத்துத் தாபத்தை வளர்த்தேன். பணம் பாதகாணிக்கையாகப் பறந்து வந்தது. முப்பது நாளும் உழைத்து, நாற்பது நாளும் உழைத்து நாற்பது ரூபாய் முழுதாகக் காண்முடியாத நான், கடைக்கண் பார்வையிலேயே காசு குவித்தேன்.

சிற்சில சமயங்களில் என் மனம் வேதனையுறும். ஆனால் பாங்கி பாஸ் புத்தகத்தில் ஏறிநிற்கும் தொகையைப் பார்க்கும்போது...

மீன் விற்ற காசு நாறாது; நாய் விற்ற காசு குரைக்காது; உடலை விற்றுப் பெறும் காசும் செல்லாக்காசு ஆவதில்லை; எத்தனையோ சீமான்களுக்கு இன்பக் கிளி நான்! உழைக்காமல் பெற்ற அவர்கள் பணம் எனக்குக் கொட்டியளக்கப்படுகிறது. என்னுடைய சிறிய தாயாரின் பெண் டாக்டருக்குப் படிக்கிறாள். பையன் ஐ. ஏ. எஸ். பரீட்சை பாஸ் செய்து விட்டான். இதுவரையில் நான் இல்லாதபொழுது என்னைப் பற்றி ஏளனம் பேசியவர்கள் கூட இனிமேல் அப்படிச்செய்ய மாட்டார்கள். ஆம்; என் தங்கை டாக்டர்; தம்பி சப்—கலெக்டர். நான் மட்டும் 'விபச்சாரி' என்றழைக்கப்பட முடியுமா?

இந்த உலகம் இருக்கிறதே, அது ஒரு விசித்திரமான சந்தை! பொருள்களை அங்கு மதிப்பிடும் முறையே அலாதியானது; தட்டில் வைத்து வியாபாரம் செய்யும் வியாபாரி நல்ல பொருளாகக் கொடுத்தால்கூட நம்பிக்கையோடு நாம் வாங்குவதில்லை; ஆனால் துப்புரவற்ற பொருட்களை ஆடம்பரமான இடத்தில் கண்ணைப் பறிக்கும் ஒளியில் வைத்து விற்கும் வியாபாரி, கேட்டதைக் கொடுத்து வாங்குகிறோம்; பேரம் பேசுவதை இழிவென்று கருதுகிறோம்.

ஒழுக்கத்தைப் போதிக்கும் சமுதாயத்திற்கு அதை நிலைநிறுத்தும் திறன் கிடையாது. ஒழுக்கமற்று வாழ ஏழைக்கு மட்டும்தான் உரிமையில்லை. பணம் என்ற பாதுகாப்பைத் தேடிக் கொண்டவர்கள் எதையும் செய்யலாம். எப்படியும் இருக்கலாம்.

லட்சிய உலகம் வேறு; பிரத்யட்ச உலகம் வேறு. இரண்டிற்குமுள்ள வேறுபாட்டினை உணர்ந்தவள் நான். பணத்தால் அந்தஸ்தைப் பெற்றவுடன் என் கடந்தகால வாழ்க்கை மறைந்து விடுகிறது....

ஆனால் தனிமையில் சிந்திக்கும்பொழுது......என் ...யமறியாதை என்னைக் கேலி செய்கிறது...அழுத்தி வைக்கப்பட்டிருக்கும் மனச்சான்று எங்கோ ஒரு மூலையிலிருந்து ஓலமிட்டு என் நிம்மதியைக் கெடுக்கிறது.... வாழ்க்கையின் உண்மைகள்—எப்பொழுதுமே அவை மறைக்கப்பட்ட ரகசியங்களாக நின்று விடுமா?

● ● ●



★ 'பஞ்ச' சீலம்! ★

பண்டிதர் வேறு எதையும் விட வெளிநாட்டுக்கொள்கைக்காகவே அவர் குழுவினரிடையே அதிகப் புகழ் பெற்றிருக்கிருர். இன்று நேற்றல்ல: வெளிநாட்டுப் புகழ் என்னும் தாகம் அவரோடு கூடப் பிறந்தது. ஏனெனில் காங்கிரஸ் கட்சிக்கு திட்டமான வெளிநாட்டுக் கொள்கையே அவருடைய அரசியல் நுழைவுக்குப் பிறகுதான் ஏற்பட்டது. இது பண்டிதருக்குப் பெருமைதான் என்ருலும்; வெறும் புகழ்ப் பூச்சியாக; வெளிநாட்டு விளம்பரம் என்னும் விளக்கொளி தேடிப் போகும் விட்டிலாக அவரும், அவரது கட்சியும் மாறிவிடக் கூடாது என்பதுதான் அவரது அரசியல் விரோதிகளும் விரும்புவதாகும்!

பஞ்சசிலம்—உயர்ந்த தத்துவம்தான்! ஆனல் உள் நாட்டிலே நிலவுகிற பஞ்ச நிலைமை தீராமல் பஞ்ச சிலத்தை உலகெங்கும் போதிப்பதற்காக செலவிடப்படும் எண்ணிறந்த தொகையை எப்படிச் சகிக்க முடியும்?

பஞ்சசிலத்தைப் பரப்புவதற்காக நடத்தப்படும் சுற்றுப் பயணங்கள்; உலகின் மூலை முடுக்கிலெங்கும் ஏராளமான பொருட் செலவில் தூதுவராலயங்கள்; விருந்து வைபவங்கள்!

ஆனல் அதே நேரம் உள் நாட்டிலே ஏழை நடுத்தர வர்க்கத்தினர் சுமக்க முடியாத அளவுக்கு வரிச்சுமைகள்; வெளிநாட்டுச் செலாவணியைக் கட்டுப்படுத்துவதற்காக உயிர் வாழ்வதற்கு மிகவும் முக்கியமான மருந்துகளின் மீது கூட இறக்குமதித் தடுப்புகள்—

இவையிரண்டும் ஒரே நேரத்தில் நடைபெறுவதை எந்த ஏழை நாடுதான் அனுமதிக்க முடியும்!

வெளிநாட்டுத் தூதுவராலயங்கள் வெள்ளை யானைகள்! அவைகளுக்கு ஏழை இந்தியாவினல் தீனிபோட முடியுமா?

இந்தக் கேள்வி பாராளுமன்றத்திலேயே கேட்கப்பட்டது.

ஆனல் பண்டிதர் இதற்கு மறுப்பு சொல்லவில்லை. வெளிநாட்டுத் தூதுவராலயங்களில் நடக்கும் செலவினங்களை எந்தக் காரணம் கொண்டும் குறைக்க முடியாது—என்று திட்டவட்டமாகக் கூறி விட்டார்.

தனது சம்பளத்தில் பத்து சதவீதத்தைக் குறைத்துக் கொண்டவர்தான் அவர்! சிக்கனத்தைப்பற்றி வார்த்தைகளைச் சிக்கனம் செய்யாமல் மேடைதோறும் கூடை கூடையாகப் பேசியவர்தான் அவர்! இருந்தாலும் புகழ் மீதுள்ள அவரது தணியாத தாகம் வெளிநாட்டுத் தூதுவராலயங்களிலே நடக்கும் வீண் விரயத்தைத் தடுக்க முடியாமல் அவரைத் தடுத்து விட்டது.

வெளிநாட்டுத் தூதுவராலயச் செலவு என்னும் யானைக்கு நீங்கள் எப்பாடு பட்டாவது, எப்படி யெப்படி வரிகளைக் கொடுத்தாவது தீனி போட்டுத்தான் ஆகவேண்டுமென்று—சிக்கனப் புலியான பண்டிதர் தீர்ப்பு கூறி விட்டார்.

என்னப்பா இது! வெளிநாட்டு தூதுவராலயச் செலவை யானைப் பசி என்கிருயே! இதில் ஏதாவது அர்த்தமிருக்கிறதா?—என்று கேட்டு விடாதீர்கள்!

—இதை நாம் மட்டும் கூறவில்லை. 'சுதேசமித்திரனே', சித்திரம் தீட்டிக் காட்டியிருக்கிறது!



மக்கள் :—அதற்குத் தீனி போடுவது நமக்குக் கட்டுபடியாகாதே!

நேரு :—வீண் கவலை—எவ்வளவு அருமையாக அதை வளர்த்து வந்திருக்கிரேம்!

(வெளி நாடுகளில் நமக்குள்ள ஸ்தானிகர் காரியாலயங்கள் விஷயத்தில் சிக்கனத்து இடமில்லை என்று பண்டித நேரு கூறுகிருர்.)

—'சுதேசமித்திரன்' (23—7—57)

அவர் எப்போதுமே 'ஆணித்தரமாகப்' பேசுவதிலே திறமை பெற்றவர். இருந்தாலும் அவரது இந்தக் கூற்று சற்றும் பொருந்துவதாக அமையவில்லை!

★

"மத்திய கிழக்கிலே கம்யூனிஸ்ட் அபாயம் ஏதுமில்லை!"

—அடித்துப் பேசினுராம் பண்டிதர், தன்னுடைய ஐரோப்பியப் பயணத்தின் போது!

ஏன்?

"ஏனெனின் அங்கே (மத்தியக் கிழக்கிலே) பெரும்பான்மையான நாடுகள் நிலப்பிரபுத்துவ நாடுகள்! அவை கம்யூனிசம் வளரும் அளவுக்கு முன்னேறவில்லை...கம்யூனிசம் என்பது தொழில் வளர்ச்சி கொண்ட சமுதாயத்தின் விளைவாகும்; நிலப் பிரபுத்துவ சமுதாயத்தில் கம்யூனிசத்திற்கு இடமே இல்லை!"

—இது பண்டிதர் தந்திருக்கிற விளக்கம்!

'தொழில் துறையில் வளர்ச்சி பெற்ற சமுதாயத்தில்தான் கம்யூனிசம் தோன்றமுடியும்'

—இந்தத் தத்துவம் 1917-ம் ஆண்டிற்கு முன்புவரை உண்மையாக இருந்திருக்கலாம்; மார்க்சும் ஏங்கல்சும்கூட அப்படித்தான் நம்பியிருந்தார்கள்.

தொழில் துறையில் அதிக வளர்ச்சி பெற்றிருக்கும், ஜெர்மனியும், இங்கிலாந்தும்தான் உலகிலேயே முதன் முதலாக கம்யூனிஸ்ட் நாடுகளாக மாறப் போகிறது என்பதுதான் அவர்களுடைய நம்பிக்கை!

ஆனல் 1917-ல் நடந்தது என்ன?

ஐரோப்பாவில் தொழில் துறையிலேயே அதிகப் பின்னணியில் இருந்த ரஷ்யாவிலே தான் கம்யூனிசக் கதிரவன் தோன்றினன்!

தொழில் துறையிலும், இயந்திர வளர்ச்சியிலும் முன்னணியில் இருக்கும் நாடுகளில் தான் கம்யூனிசம் தோன்ற முடியும் என்ற நம்பிக்கை தூள் தூளாயிற்று!

—இது ஐரோப்பாவில்! இதேபோல்தான் ஆசியாவிலும்!

ஆசியாவிலே தொழில்துறையிலும், இயந்திரவளர்ச்சியிலும் முன்னணியில் இருக்கும் நாடு ஜப்பான்!

ஆனல் ஆசியாவிலே கம்யூனிசம் முதன் முதலில் எங்கே தோன்றியது?

முழுக்க முழுக்க விவசாய நாடான சீனவில்!

—சிசம் கால சரித்திரம் பண்டிதருடைய 'தீர்ப்பு தவறென்பதைத்தான் நிரூபிப்பதாக இருக்கிறது.

பத்து ஆண்டுகள்!

"தாமதப்படுத்தப்படுகிற நீதி மறுக்கப்படுகிற நீதியாகும்"—என்று ஆங்கிலத்திலே பழமொழி சொல்வார்கள்!

காலத்திலே நீதி வழங்கப்படாவிட்டால் அது பாதிக்கப்படுபவர்களுக்கு எந்த வித நன்மையும் செய்யாது.

ஆனல் இந்திய உபகண்டத்திலே வழக்கு மன்றத்திலே ஏற்படுத்தப்படுகிற இந்தத் தாமதம் உலகப் புகழ் பெற்றதாகி விட்டது!

நீதி மன்றத்தின் படிகளில் கால் வைத்து விட்டாலே ஒருவன் முடிவு தெரிந்து; திரும்புவதற்கு பல ஆண்டுகள் ஆகிவிடும்!

அதற்குச் சிகரம் வைத்ததுபோல் டெல்லியிலே ஒரு ஏமாற்று வழக்கு ஒன்று நடைபெற்றது. அதன் பூர்வாங்க விசாரணைகள் முடிந்து தீர்ப்பு வெளியாவதற்கு 10 ஆண்டுகள் ஆகி...ன்கு ...ம் விட்டது!

—நீதி பரிபாலனத்தில் வேகம் எப்போது ... வருமோ?

சந்தா விபரம்

உள் நாடு

ஆண்டு சந்தா 6—50
ஆறு மாதம் 4—00

வெளி நாடு

ஆண்டு சந்தா 7—50
ஆறு மாதம் 4—50



சுரங்கம்

ஆசிரியர் : எஸ். பி. ராமச்சந்திரன்

எழுத்து வேந்தன் எமிலி ஸோலாவின் 'ஜெர்மினல்' என்ற பெருங்கதை 'சுரங்கம்' என்னும் தலைப்புடன் தமிழில் தரப்பட்டுள்ளது. நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளரின் கூலி உயர்வுப் போராட்டம் ஒன்று படிப்படியாய் உருவாகி, வளர்ந்து, நடைபெற்று, இறுதியில் தோல்வியுற்ற சோகச் சம்பவந்தான் கதையாக உருவெடுத்திருக்கிறது. எல்லோரும் விரும்பிப் படிக்கக் கூடிய சுவையுள்ளதாக கதைப் பொருள் இல்லாவிடினும், வளமிக்க வர்ணனைத் திறன் அலாதியான அழகுடன் மிளிர்கிறது. சுரங்கத் தொழிலாளரின் அன்றாட அலுவல்கள் (அந்தரங்கமாய் நடைபெறும் காதல்—உடலுறவுக் காட்சிகள் உட்பட), அவர்கள் வர்க்க ரீதியில் திரண்டெழுந்த வகை, போராட்ட வெறி பிடித்து ஆண் பெண் அனைவரும் ஆர்ப்பரித்து அலைந்த முறை, வறுமையின் சோகப் பிடிகளில் சிக்கியும், பரிதாப மரணத்தின் வாயில் அகப்பட்டும், அந்த அவலத்துக்கு ஈடு கொடுக்க முடியாமல் மனவுறுதி தளர்ந்து, மீண்டும் முதலாளி வர்க்கத்துக்குப் பணிந்துபோன நிலை—ஆகிய நிகழ்ச்சிகள் யாவும் உடனிருந்து பார்ப்பதுபோன்ற உணர்ச்சி ஏற்படும் வண்ணம் விவரிக்கப்பட்டுள்ளது இந்நாவலின் தனிச் சிறப்பாகும். பொதுவுடமை, அராஜக வாதம், [illegible] முதலாளித்துவம், அதிகாரம் ஆகிய பல்வேறு முரண்பட்ட தத்துவங்களெல்லாம் கதாபாத்திரங்களாய் உருவகப்படுத்தப்பட்டு நம்முன் நடமாடுகின்றன. மொழிபெயர்ப்பு தாராளமான முறையில் செய்யப்படாததால் தமிழ் நடை சரளமாக இல்லாத ஒரு குறையைத் தவிர வேறு சொல்வதற்கில்லை. நடையைத் திருத்தி எழுதினால் இன்னும் பயனேற்படும்.

வெளியீடு :

பிரேமா பிரசுரம், சென்னை-24.

விலை ரூ 3.

அறிவுக் கடல்

ஆசிரியர் : பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரை

"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்" என்ற பாரதியின் வாக்கிற்கிணங்க, மனித குலத்துக்குப் புதுவாழ்வுப் பாதையினை வகுத்துள்ள மூன்று பெரும் பேராசிரியர்களின் புகழ்பெற்ற நூல்களை—தகுதியும் திறனும் படைத்த நமது பேரறிஞர் சிறப்பானதொரு நூலாக மொழிபெயர்த்துத் தமிழ் மக்கள் நலம்பெறத் தந்துள்ளார். தக்கதொரு தலைப்புடன்! பொதுவுடைமைத் தந்தையான காரல் மார்க்சின் "மூலதனம்", பிரஞ்சுப் புரட்சிக்கு வித்திட்ட பேனா வீரன் ரூசோவின் "சமூக ஒப்பந்தம்", வாழ்ந்து வரும் பிரிட்டிஷ் தொழிற் கட்சியின் ஆராய்ச்சி மேதை ஹெரால்டு ஜே. லாஸ்கியின் "பொதுவுடைமை" ஆகிய மூன்றின் தொகுப்பே இந்நூல். எளிதில் யாருக்கும் விளங்க முடியாத அரியபெருங் கருத்துக்களை, யாவரும் தமிழில் உணர வேண்டும் என்ற சீரிய நோக்கோடு, அழகு தமிழ் நடையில், எளிய சொற்கோர்வைகளால், ஆசிரியர் மாணாக்கர்க்குப் பாடம் போதிக்கும் தெளிவுடன், நூலை ஆக்கித் தந்துள்ள ஆசிரியரை எவ்வளவு பாராட்டினாலும் தகும். பொதுவுடைமை, குடியாட்சி போன்ற புனித தத்துவங்களை—அவற்றின் கர்த்தாக்களின் மொழிகளாலேயே தெரிந்து கொள்வது சிறப்புடையதல்லவா!

விலை ரூ. 2

சந்தனத் தேவன் புதையல்

ஆசிரியர் : வி. கரு. ராமநாதன்

ஒரு சிறிய துப்பறியும் கதைக்குத் தேவையான சகல அம்சங்களும் சரியாகப் பொருந்தியுள்ளன. தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் கதைப் பொருளும், தெளிவாக ஓடுகின்ற நடையும், [illegible]துவரும் சம்பவச் சேர்க்கைகளும் இதற்கு நல்ல முறையில் அழகூட்டுகின்றன. ஏராளமான ஆங்கிலச் சொற்கள் தமிழ் போலவே வெகு தாராளமாக அவசியமின்றிக் கையாளப்பட்டிருப்பது ஏனோ தெரியவில்லை. காதலி [illegible]) என்பதற்கு [illegible] (காதலன்) என்பனபோன்ற ஆங்கிலக் கொலைகளைத் 'பத்து [illegible]' வேண்டும் [illegible]ம்.

விலை ரூ 1-50

[illegible] இரண்டு புத்தகங்களையும் வெளியிட்டோர் :

அருணோதயம், சென்னை-14.

✻ 8-ம் பக்கத் தொடர்ச்சி

களுக்கு என்று ஒரு தனிநாடு வேண்டும்' என்ற கொள்கையை வெளியிட்டபோது, ஜின்னா உள்ளிட்ட அனைவரும் வாய்விட்டுச் சிரித்தார்கள். 'பாகிஸ்தான் வேண்டும்' என்ற லாகூர் தீர்மானம், 'அரசியல் அபத்தம்' என்று அலட்சியப்படுத்தப் பட்டது. என்றாலும், ஏழாண்டுகளுக்குள் பாகிஸ்தான் ஒரு உண்மையாகி விட்டது.

இதுபோன்று உவமை கூறுவது, வழக்கமாக தவறாகவே முடிகின்றன என்றாலும் கடந்த காலத்திய முஸ்லீம் வகுப்பு வாதிகளுக்கும், இன்றைய திராவிடப் பிரதேச வெறியர்களுக்கும் உள்ள ஒருமைப்பாடுகளை நாம் கவனிக்காமலிருக்க முடியாது. பொறாமை, வெறுப்பு, பிரதேச சுயநலம், வெளிப்படையான சரித்திரப் புரட்டு—இவைதான், தேசிய ஒற்றுமையைக் குலைக்கிற எல்லா இயக்கங்களுடையவும் பிரதான சாயல்களாகும்.

தென்னாட்டில் இன்று அவசரமாகத் தேவைப்படுவது சமரசம் வேண்டும் என்ற மன்னிப்புக் கோருவது போன்ற—கண்டிப்பில்லாத சாதாரண வேண்டுகோள் அல்ல; மாறாக நமது கலாச்சாரம், நாகரிகம் இவற்றின் சாரமான ஒற்றுமை என்ற இலட்சியத்தைத் தீவிரமாக வற்புறுத்துவதுதான். இது போன்ற பிரச்சினைகளில் சமரசத்திற்கு இடமே கிடையாது. ஃ

✻ 4-ம் பக்கத் தொடர்ச்சி

நான் : ஆங்கிலத்தை நாம் அடியோடு நீக்கிவிடப் போவதில்லையே! ஆங்கில மொழி மாணவர்களுக்குக் கற்பிக்கப்படத்தான் வேண்டும்! ஆனால் அந்த மொழியிலே வரலாறு, அரசியல், பொருளாதாரம் போன்ற பாடங்களைக் கற்பித்தல் கூடாது!

துணை : அப்படியானால் மாணவர்கள் தாய்மொழி, ஆங்கிலம், இந்தி—ஆகிய மூன்று மொழிகள் கற்க வேண்டுமே!

நான் : வேண்டியதில்லையே! உலகப் பொது மொழி ஆங்கிலமே இந்தியாவின் பொதுமொழியாக இருககலாம்! இந்தியாவின் பொதுமொழியென்ற பெயரிலே ஒரு மொழியை இந்தி தெரியாத மக்கள் தலையிலே சுமத்துதல் அநியாயத்திலும் அநியாயம்!

துணை : ஆமாம்! இவ்வளவு தூரம் எடுத்துக்கூறி என்ன பயன்?

நான் : என்ன பயனா? தாங்கள் நினைத்தால் சென்னைப் பல்கலைக் கழகத்திலாவது தமிழ் முழங்கச் செய்யலாமே!

துணை : என்னமோ பார்க்கலாம்!

நான் : சரிதான்! நீங்களும் "லாம்" போட ஆரம்பித்து விட்டீர்களா?

துணை : மனம் நொந்துபோய் விடாதீர்கள்! கனவு நினைவானாலும் ஆகலாம்!

[திரு. ஏ. எல். முதலியார் திடீரென மறைந்தார். என் கனவும் கலைந்தது. அது என்று நினைவாகுமோ?] ஃ

—**ஆரூர் ஆனந்தன்**
பி. எஸ்ஸி., பி. டி.

பிறைவானம் . . .

✻ 11-ம் பக்கத் தொடர்ச்சி

பண முதலைகள் எத்தனையோ அவன் பிடியில் சிக்கிச் சிதைந்திருக்கின்றன. பணம் சேர்த்து-ஆனால் மற்றோருக்கு—வறியோருக்குத் தந்துதவ வேண்டும் என்ற நற்பண்பு இல்லாதவர்களது சொத்தெல்லாம் அந்தப் பேய் விழுங்கியது!

மக்களின் மனதிலே கப்பிக் கிடந்த அந்த அஞ்சுகின்ற தன்மையும்—அறிவில்லா பண்பும்—யோசித்துப் பார்க்காத குணமும்தான் பூபதித் தேவனை மட்டுமல்ல; அந்த ஒரு 'பேயை' மட்டுமல்ல; எத்தனையோ அரச மரத்துப் பேய்களை—ஆலமரத்துப் பிசாசுகளை—மதகடிக் காட்டேரிகளை—மயானத்துப் பூதங்களை நாட்டிலே நடமாட விட்டிருக்கிறது! விழியிருந்தும் அறியாமைத் திரை மறைத்திருக்கின்ற காரணத்தால் கருத்துக் குருடர்களாகத் திரியும் அவர்கள் திருந்தும் நாள்தான்—"பயம் — அதுதான் பேய்!" என்று உணரும் நாள்தான்—இத்தகைய மூடநம்பிக்கைகளின் மரண தினம்!

அதைத்தான் வள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சொன்னார், அத்தகைய பலவீனமுடையவர்கள் பகைவர்களின் பாய்ச்சலுக்கு—அதனால் வீழ்ச்சிக்கு எளிதில் இலக்காகிவிடுவார்கள் என்று, தன்னுடைய இரண்டுவரி எழுத்தோவியத்தின் மூலம்! அதையேதான் இன்றைய தினம் பகுத்தறிவாளர்கள் சொல்லுகிறார்கள் 'அஞ்சாதீர்கள்! அஞ்சாதீர்கள்!' என்று! ஆனால் இன்னும் மூடநம்பிக்கையில் அசையாத நம்பிக்கை வைத்திருக்கிற மக்கள் அவர்களைத் திட்டுகிறார்களே!

உங்களை அரச மரத்தடியிலேயே நிறுத்திவிட்டு நான் ஏதேதோ எழுதிக்கொண்டே போகிறேனே!

அப்புறமென்ன? சற்று நேரத்தில் போலீஸ் வந்தது! பூபதித் தேவனின் சடலம் போலீசிடம் சிக்கியது. புலிகள்—பயங்கரக் கொள்ளைக்காரனைப் பிணமாகக் கொண்டு செல்வதிலே புன்னகை பூத்துக் கொண்டார்கள்!

✻

அன்று ராசனும் ராணியும் விளையாடிக் கொண்டிருந்தார்கள். எங்கே என்கிறீர்கள்? அரச மரத்தடியில்தான்!

அரசமரம் என்றாலே கண்களை இறுக மூடிக்கொள்ளும் ராணிதான் —"பேய் இருக்கிறது; போய்ப் பார்!" எனப் பந்தயம் கட்டிய ராணிதான்—கொஞ்சமும் பயமின்றி அங்கே விளையாடிக்கொண்டிருந்தாள்.

அது மட்டுமல்ல—

"ராசன்"—என்று [illegible]துப் பட்டையிலே எழுதியிருந்ததிற்குப் பக்கத்தில் ராணி இப்படி எழுதினாள்: "[illegible]சொலி" என்று!

ராசன் 'கலகல'வென்று சிரித்தான். ராணியும் மேற்கண்ட குறளின் பொருளைப் புரிந்து கொண்டு விட்டாள், இப்போது!

—சொர்ணம்

குறள் விளக்கக் கதை

பயம்- ஒரு 'பேய்'!

"அஞ்சும் அறியான் அமைவிலன் ஈகலான்
தஞ்சம் எளியன் பகைக்கு"

—தமிழாசிரியர் இந்தக் குறளுக்கான விளக்கத்தைத் தந்துவிட்டு, தம்பி தங்கைகளைப் பார்த்துச் சொன்னார்:

"மாணவ மாணவிகளே!......உங்களனைவருக்கும் இன்று ஒரு பரிட்சை வைக்கிறேன். இந்தக் குறளை விளக்கி ஒவ்வொருவரும் ஒவ்வொரு கதை எழுதித் தர வேண்டும்! நாளைக் காலை வகுப்பில் நான் பரிசீலிப்பேன். பரிசு உண்டு. அது என் உசிதம்!" என்றார்.

கதை கேட்டுக் கதை கேட்டுப் பழக்கப்பட்ட நம் தங்கைக்கு கொள்ளை மகிழ்ச்சி! பள்ளி முடிவதற்கு முன்பே கதை ஒன்றை உருவாக்கி—இரவில் எழுத்துக்களாக்கி—மறுதினம் வகுப்பில் நீட்டி—முடிவில்—பரிசையும் பறித்துக் கொண்டது!

குறள் புத்தகம் ஒன்றைத் தங்கைக்குப் பரிசளித்த அந்தக் கதை, இதோ இருக்கிறது :

"அடாடாடா! என்ன பயங்கரம்! என்ன கோரம்! பேய், பூதம், பிசாசு என்று நான் கதைகள்தான் கேட்டிருக்கிறேனே தவிர, அது இத்தனை கோரமானது என்று நான் எண்ணிக்கூடப் பார்த்தது கிடையாது!..." என்று யாராவது ஏதாவது உளறிக் கொட்டிக் கொண்டு தெரு வழியே நடந்து போனாலும் போதும்; அவ்வூர் மக்கள் அஞ்சிச் சாவார்கள்! அப்படித் தலைவிரித்தாடிய பயத்திற்கு முன்னே அவர்களது பகுத்தறியும் சக்தியும் பாழ்பட்டுப் போயிற்று!

"சேதி தெரியுமா? ஊரிலே புலி நடமாடுகிறதே!"—'ஐயையோ! மீண்டும் புயல் வீசப் போகிறதாமே!'—'ஹைடரஜன் குண்டு முதலில் நம் தலையில்தான் விழப் போகிறதாம்'— இப்படி எல்லாம் திடுக்கிடும் செய்திகளைச் சொன்னால்கூட அந்த ஊர் மக்கள் பயப்பட மாட்டார்கள். 'பூ இதுதானா?' என்று கேலியும் பேசுவார்கள்.

ஆனால், அரச மரத்துப் பேயைப்பற்றி பேச்சு எடுத்தாலோ...அவர்கள் 'கப் சிப்' தான். ஒரே நடுக்கம்; பெரும் பயம்!

ஊர்க் கோடியிலே ஒரு சுடுகாடு; பயங்கரச் சுடுகாடு...... அங்கே ஓர் அரச மரம்; மிகப் பெரிய மரம் அதிலேதான் இருந்ததாம் அந்தப் பேய்!

பெருத்த உடல்; கருத்த உருவம்; அச்ச மூட்டும் குரல்; சலங்கை சப்தம்—இதுதான் பேயாம்' இப்படிக் கதையாகச் சொன்னார்கள் 'அதைக் கண்டேன்' என்றவர்கள்.

ஊரைச் சுற்றி ஓயாத பயத்தை உண்டு பண்ணிவிட்ட அந்தப் பேயைப்பற்றி ஒரு நாள் ராசனுக்கும் ராணிக்கும் சண்டை வந்துவிட்டது. இருவரும் பள்ளி நண்பர்கள். படு சுட்டிகள்! ஒரே வித்தியாசம்; ராணி பயந்தவள்; ராசன் பயப்பட வைப்பவன்!

"அரச மரத்தில் பேய் இருப்பது உண்மையே!"—இது ராணியின் வாதம்.

"இல்லை! அரச மரத்தில் இலையும் கிளையும்தான் இருக்கிறது. இரண்டு குருவிக் கூடுகளும், ஒரு மரப்பொந்தும், அதிலே ஒரு காக்கைக் குடியும் தான் இருக்கின்றன! எல்லாம் நான் ஏறிப் பார்த்ததுதானே! பேயாவது நோயாவது!"—இது ராசனின் கிண்டல்.

விளையாட்டு வாதம் முற்றியது. பந்தயம் என்ற முடிவில் நின்றது! இரவு ஒரு மணிக்கு ராசன் சுடுகாட்டுக்குப் போக வேண்டும்; அரச மரத்தில் அடையாளம் ஒன்றை செதுக்க வேண்டும்—இதுதான் 'பயங்கொள்ளி' ராணி, ராசனுக்கு இட்ட பந்தயம்! ராசன் தயாரானான்.

ஃ ஃ ஃ

நள்ளிரவு; ஒரு மணி! ஒரே இருட்டு; பயமூட்டும் கும்மிருட்டு!

அந்த நட்ட நடு நிசியிலே சுடுகாட்டில் நடந்து கொண்டிருந்தான் ராசன். இருட்டு அவனுக்கு. பயத்தைத்தான் கொடுத்தது. இருந்தாலும் பந்தயமல்லவா? பொழுது விடிந்ததும் விடியாததுமாக ராணி எழுந்து உட்கார்ந்து கொண்டு, கிண்டல் செய்ய ஆரம்பித்து விடுவாளே! அவள் ஏதேனும் கேலிப் பெயர் சூட்டிவிட்டால் பள்ளிச் சிறுவர் சிறுமியரிடையே எப்படி நடமாடுவது? அந்தப் பட்டப் பெயரைத் தடுத்துக் கொள்ள பயத்தை விரட்டத்தான் வேண்டும்! ராசன் படபடக்கும் மார்பைக் கையால் அழுத்திக் கொண்டான். அரச மரத்தை நெருங்கி விட்டான். பையிலிருந்த கத்தியை எடுத்தான். மரத்தில் தன் பெயரையே அடையாளமாகச் செதுக்க ஆரம்பித்தான்!

"ராசன்"—அவனது பெயர் அரசமரத்துப் பட்டையிலே அழகாகச் செதுக்கப்பட்டுவிட்டது. ராசனுக்கு கொள்ளை மகிழ்ச்சி...ஆனால்...

திடீரென ஏதோ சலசலப்பு சப்தம் கேட்டது. ராசன் திடுக்கிட்டான்; திகைத்தான்; 'குப்' பென்று வியர்த்தது உடல்! உடனே சுற்றுமுற்றும் உற்றுப் பார்த்தான்.

மறுகணம் 'ஐயோ' என்று அலறினான். ஏன்?......கொஞ்ச தூரத்திலே. இருளோடு இருளாக—ஒரு கரிய உருவம்...மையிருட்டிலேயும் கண்ணுக்குத் தெரிந்த பெரிய உருவம் அரச மரத்தை நோக்கி வேக வேகமாக ஓடிவந்து கொண்டிருந்தது.

"ஐயையோ! பேய்!" என்று கத்தனான் ராசன். ஓட்டம் பிடித்தான். திரும்பிப் பார்த்தான். 'ஜல், ஜல்' என்ற சலங்கை சப்தம் ஒலிக்க அந்தப் பாழும் பேய் அவனுக்கு மிக அருகில் ஓடிவந்து கொண்டிருந்தது.

ராசனின் கையிலிருந்த கத்தி நழுவி கீழே விழுந்தது. கொஞ்ச தூரம் ஓடினான். அதற்கு மேல் அவனால் நகர முடியவில்லை. நெஞ்சு படபடத்தது கைகள் நடுங்கின; கால்கள் மரத்தன; கண்கள் இருண்டன; உடல் துவண்டது; அவன் கீழே விழுந்தான்; நினைவிழந்தான்.

ஆனால், அடுத்த கணமே 'ஐயோ' என்று மற்றொரு அலறல் கேட்டது. சுடுகாட்டையே கிடுகிடுக்க வைத்த அந்தப் பெருங்குரல் ராசனின் காதுகளுக்கு எட்டவேயில்லை.

திடீரென்று எழுந்து அடங்கிய அந்த அபயக் குறல் யாருடையது? அதன் பிறகு அங்கே நீண்ட மவுனம் நிலவுவானேன்?

பளபள வென்று பொழுது விடிந்தது. மயக்கம் தெளிந்து கண் விழித்தான் ராசன். பயம் அவனை விட்டபாடில்லை. நடுங்கியபடியே எழுந்தான்.

ஆனால், அவனுக்குக் கொஞ்ச தூரத்திலே அந்தப் பேயும் உருண்டு கிடந்தது.

ராசன் பகலின் துணையைக் கொண்டு அந்தப் பேயை நெருங்கினான். என்ன ஆச்சரியம்! அது பேயல்ல; ஒரு பயங்கரமான மனித உடல்! இரத்த வெள்ளத்திலே கிடந்த பெருத்த உருவம்! அதன் மார்பிலே பதிந்து கிடந்தது ராசனின் கத்தி.

இரவு ராசனின் கையிலிருந்து விழுந்ததல்லவா அந்தக் கத்தி. அது கற்களுக்கிடையே செங்குத்தாக நின்று கொண்டிருக்க வேண்டும். ஓடிவந்த 'பேய்' கல் தடுக்கிக் கீழே சாய கத்தியும் நேராக அதன் மார்பில் தைத்திருக்க வேண்டும். இதுதான் ராசனின் யோசனையில் உதித்த உண்மை.

அதற்குள் கூட்டம் கூடிவிட்டது; இரவு நேரங்களில் அந்தப் பக்கம் பார்க்கவும் அஞ்சும் மக்கள், சூரியனின் துணையால் அங்கே சூழ்ந்து நின்றனர். 'பேய்' பரிசோதிக்கப்பட்டது. ஒரு பயங்கர உண்மையும் வெடித்தது.

அங்கே கிடந்த மனித உடல் பேயினுடைய உடலல்ல; 'பேய்' என்று இருந்தால், அதனினும் கொடிய 'பயங்கர வாதி'யின் உடல் ஆமாம்; அந்த உடலுக்குரியவன் அந்த வட்டாரத்து மக்களின் ஒரே எதிரி; நேர் விரோதி; பாதகம் செய் பகைவன்!

கொலை செய்து—கொள்ளையடித்து — தலை மறைவாய் வாழ்ந்து வந்த பூபதித்தேவன் தான் அவன்!

அவன் அந்த ஊர்மக்களுக்கு மட்டுமல்ல; நாட்டுக்கே பகைவன்! ஆனால் அந்தப் பகைவனும்தான் வாழ்ந்து கொண்டிருந்தான்! எப்படி? அழித்து ஒழிக்கப்பட வேண்டிய அந்த நச்சுப் பாம்பை வாழவிட்டது எது?

மக்களின் அஞ்சுகின்ற தன்மை—

அவர்களின் அறியாமை—

யோசித்துணரும் பண்பு இல்லாத தன்மை—

இவைதான் அந்தப்பகைவனை—பயங்கரபூபதியை நேற்றுவரை வாழவிட்டுக் கொண்டிருந்தது.

பேய் என்று உருமாற்றித் திரிந்து வழிப்பறி நடத்தினான்—கண்டவர் மிரண்டனர்; மிரண்டவரின் பொருள் அவனுக்கு உடமை!

தனக்குப் பிடிக்காதவர்களின் கழுத்தைப் பிடித்து நெறித்துக் கொன்று போடுவான்; வாயிலிருந்தும் மூக்கிலிருந்தும் இரத்தம் கசிந்திருக்க— அரச மரத்தடியிலே பிணமாகக் கிடந்த அவர்களைப் பார்ப்பவர்கள், "என்ன பாவம், செய்தானோ? பேய் பழிவாங்கிவிட்டது!" என்று பேசிக்கொள்வார்கள்.

10-ம் பக்கம் பார்க்க

ஜஷ்யேந்திரமணி; சென்னை

(?) "பவுடர் கலைகிறது" என்று 'விடுதலை' தலையங்கம் எழுதியிருக்கிறதே; படித்தீர்களா?

எந்தப் பவுடர் கலைகிறதாம் —"பெரியார் காமராசர் உறவு" என்ற பவுடரா?

குருசாமி; சீழ்ப்பாக்கம்; சென்னை

(?) 1923-ல் மதுரையில் ஜே. எஸ் கண்ணப்பர் தலைமையில் ஆலயப்பிரவேசம் நடந்ததாக சட்டசபையில் ஆசைத்தம்பி பெருமை பேசினாரே; உடனே அதற்குப் பதில் கொடுக்கும் வகையில் தேனி தியாகராசன் "1923ல் ஆசைத்தம்பி பிறந்தே இருக்கமாட்டாரே! இவருக்கு அது எப்படி தெரியும்?" என்று கேட்டாரே; அதனால் உங்களை மடக்கிவிட்டார் என்றுதானே பொருள்?

உம்முடைய பெயருக்கேற்றபடி கேள்வியைக் கேட்டிருக்கிறீரே! 1857-ல் தான் சுதந்திரப் போருக்கு வித்திடப்பட்டது என்று கூறினால்; உடனே ஒருவர் "அது உனக்கு எப்படித் தெரியும்? —அப்போது நீ பிறந்தே இருக்கமாட்டாயே!" என்று கேட்பது எவ்வளவு அறியாமையோ அதைப்போன்றதே "தேனி"யின் கேள்வியும்!

வி. கண்ணப்பன்; தஞ்சை

(?) திராவிட நாடாவது வெங்காயமாவது—என்று தேர்தல் நேரத்தில் பேசியவர்கள், இப்போது அதி தீவிரமாகத் திராவிட நாடு பற்றிப் பேசுவது ஏனோ?

"பச்சோந்தி, பல வர்ணம் காட்டுகிறதே ஏன்?" என்று கேட்டால் அதற்கு எப்படி நண்பரே பதில்கூற முடியும்!

என். சந்தானம்; கரூர்

(?) சட்ட சபையால் திராவிட நாடு கிடைக்குமா?

அது எப்படிக் கிடைக்கும்? வடநாட்டு ஏஜெண்டுகளான காங்கிரஸ்காரர்களுக்குத் தேர்தல் பிரச்சாரம் நடத்தினால்தான் "திராவிட நாடு" கிடைக்குமென்கிறார் ஒரு தீவிரவாதி!

கே. கோதண்டராமன்;
மேல் கற்கண்டார் கோட்டை

(?) சாதி வித்தியாசம் ஒழிவதற்கு சிறந்த வழி என்ன?

சாதியை ஏற்படுத்தி, அதை விடாப் பிடியாகப் பிடித்துக் கொண்டிருக்கும் காங்கிரஸ் பார்ப்பனர்களுக்கு ஓட்டுப் போடுவதே சாதியை ஒழிக்க சிறந்த வழி என்கிறார் பெரியார்.

வேல்சாமி; நாகை

(?) தி. மு. கழகம், சட்ட சபையில் வடநாடு தென்னாடு பேதம் பற்றியும், பிரிவினையை வலியுறுத்தியும் தருகிற புள்ளி விபரங்கள் காங்கிரஸ் அமைச்சர்களால் இதுவரை மறுக்கப்பட்டிருக்கிறதா?

காங்கிரஸ் அமைச்சர் தந்த புள்ளி விபரம்தான் அன்பழகன் அவர்களால் தவறு என்று சுட்டிக் காட்டப்பட்டு, பிறகு அமைச்சரே தன் தவறைத் திருத்திக் கொண்டார்.

சி. எஸ். சிங்காரவேலன்;
வேட்டைக்காரன் புதூர்.

(?) தி. மு. கழகம் சட்ட மன்றத்தில் ஆற்றுகிற பணி குறித்தும், அதனால் மக்கள் மத்தியில் ஏற்படுகிற செல்வாக்கு கண்டும் சிலருக்கு வயிறு பற்றி எரிகிறதாமே; உண்மையா?

சிலருக்கு பற்றி எரிகிறது; ஒருவருக்கு இருதயமே வெடித்து விடும் போலிருக்கிறது. அதனால்தான் பாபம்; பல சரக்கு மூட்டைகளைக் குத்துவதை விட்டுத் தன்னையே குத்திக் கொள்ள ஆரம்பித்திருக்கிறார்.

தருமலிங்கம்; திருவட்டீசுவரன் பேட்டை

(?) "சட்ட சபையில் குறளைத் தப்பர்த்தம் செய்துகொண்ட கலைஞர்" என்று விடுதலை எழுதியிருக்கிறதே; உண்மையா?

விடுதலை மட்டுமல்ல; விகடனும் எழுதியிருக்கிறது. "கோலொடு நின்றான் இரவு" என்பதில் 'இரவு" என்பதில் வருகிற "ர" இடையினம் என்றார் கருணாநிதி. வல்லின "ற" என எண்ணிக்கொண்டு பேசினார் நிதி மந்திரி. இதில் யார் தப்பர்த்தம் செய்துகொண்டது என்பதைத் தாங்களாவது சிந்தித்துப் பார்ப்பது நல்லது. கொள்ளிடம் பாலத்தில் சுங்க வரி வசூலிப்பதைச் சுட்டிக் காட்டி—

"வேலொடு நின்றான்
இடு என்றது போலும்
கோலொடு நின்றான் இரவு"

என்ற குறள் நினைவுபடுத்தப்பட்டது; அவ்வளவுதான்!

பி. டபிள்யூ. கருணாகரன்;
பாளையங்கோட்டை

(?) வடக்கு வாழ்கிறது; தெற்கு தேய்கிறது—எனத் தி. மு. க. உறுப்பினர்கள் ஆதாரப் பூர்வமாகப் பேசுவதைக் காங்கிரஸ்காரர்கள் கேலி புரிகிறார்களே அதைப் பார்த்து மகிழ்ச்சியடைகிற விடுதலையை எந்தப் பட்டியலில் சேர்ப்பது?

எந்தப் பட்டியலையும் தயவுசெய்து மாசுபடுத்த வேண்டாம் நண்பரே!

மதுரையில்

அண்ணா!

ஆகஸ்ட் 11-ல்

மதுரை வழக்கு நிதிக்காக சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துவார்கள்!

விற்பனையாகிறது!

இலட்சியக் காவியம்!

திராவிட நாடு பிரிவினையை கொள்கையாக சுமார் முப்பது ஆண்டுகளாகத் திராவிட இயக்கம் கொண்டு வருகிறது. ஆனால் திராவிட நாடு ஏன் வேண்டும் என்ற கொள்கையை முழு அளவில் விளக்கி இதுவரை புத்தக வடிவில் அந்த இயக்கத்தினர் ஒரு புத்தகம் கூட வெளியிடவில்லை. அந்தப் பெருங் குறையை நீக்குகிறது. 'ஏன் வேண்டும் இன்பத் திராவிடம்" என்ற இந்தப் புத்தகம்.

இந்தப் புத்தகம் எழுதப்பட்டிருக்கும் முறையே ஒரு புதுமையாகும். திராவிட நாடு ஏன் வேண்டும் என்பதை நேரடியாகக் கூறாமல், திராவிட நாடு ஏன் வேண்டாம் என்பவர்களுக்குப் பதில் கூறும் வகையில் புத்தகம் அமைந்திருக்கிறது. திராவிட நாடு வேண்டாம் என்பதற்காகக் கூறப்படும் ஒவ்வொரு காரணத்திற்கும் மறுப்புக் கூறப்பட்டிருக்கிறது. எளிய தெளிந்த தமிழ்நடையில் புத்தகம் எழுதப்பட்டிருக்கிறது.

—"தினத்தந்தி"

மாறன், எம். ஏ. எழுதிய

"ஏன் வேண்டும் இன்பத் திராவிடம்?"

விலை ரூ. 1—8—0

முத்துவேல் பதிப்பகம்,
11, மதுரை ரோடு, திருச்சி—8

24—5—57 அன்று மேட்டுப்பாளையத்தில் நடைபெற்ற தி. மு. கழகப் பொதுக் கூட்டத்தில் திருச்சி அழகுமுத்து அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார். மேடையில், நகர தி. மு. க. கிளை செயலாளர் தோழர் என். ராமலிங்கம், ஆசிரியர் மு. க., குளித்தலை முத்துக்கிருஷ்ணன்—ஆகியோரைக் காணலாம்.

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும், மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4-128, மவுண்ட்ரோடு, சென்னை-6, தமிழ்நா